


ISSN: 2582–5518

புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




திங்கள் ❖ நவம்பர். 20, 2023 | சென்னை & புதுக்கோட்டை | 5 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 46 ❖ ரூ.10

## "உதயநிதியை முதல்வராக்கும் திட்டம் ஒருபோதும் நிறைவேறாது"

# சாடல்

## மன்னராட்சி முறையைப் போல, திமுக கட்சியினர் குடும்ப ஆட்சி- ஸ்டாலினுக்கு பின்னர் உதயநிதியை முதலமைச்சராக்க திட்டமிட்டு வருகின்றனர்;எடப்பாடி பழனிசாமி



தருமபுரி , நவ. 20-

உதயநிதியை தமிழக முதல்வராக்கும் திட்டம் ஒருபோதும் நடக்காது என தருமபுரியில் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி பேசினார்.

தருமபுரி மாவட்ட அதிமுக ஜெயலலிதா பேரவை செயலாளர் எஸ்.ஆர்.வெற்றிவேல் இல்லத் திருமணம் மற்றும் 100 இணையருக்கு இலவச திருமணம் நேற்று தருமபுரி அடுத்த குண்டலப்பட்டியில் ஸ்ரீரங்கநாதன் ரஞ்சிதம் திருமண மண்டபத்தில் நடந்தது. நிகழ்வில் முன்னாள் முதல்வரும், அதிமுக பொதுச் செயலாளருமான பழனிசாமி திருமணங்களை நடத்தி வைத்தார்.

பின்னர் அவர் பேசுகையில்: "இன்று நடந்த மணவிழாவில் மணம்முடித்துக்கொண்ட தம்பதியர் அனைவரும் அனைத்து வளங்களும் பெற்று பல்லாண்டு வாழ வேண்டும். அதிமுக ஒரு குடும்பம் என்பதற்கு இந்நிகழ்ச்சியே சான்று. இதுபோன்ற நிகழ்வுகள் அதிமுகவில் மட்டுமே நிகழும். அதேபோல, அதிமுகசாதி,மதங்களுக்கு அப்பாற்பட்ட கட்சி. அதிமுக பாஜக கூட்டணியில் இருந்து பிரிந்து விட்டத்தை தெளிவாக அறிவித்து விட்டோம். இதை பொறுத்துக் கொள்ள முடியாத திமுகவினர் எதையெல்லாமோ பேசி வருகின்றனர். மீண்டும் தெரிவிக்கிறேன், அதிமுகவுக்கும், பாஜகவுக்கும் எந்த தொடர்பும் இல்லை. ஆனால், திமுக தலைவர் ஸ்டாலின் மற்றும் அந்த கட்சியினர் தவறான பிரச்சாரத்தை செய்து வருகின்றனர். சிறுபான்மையினர் வாக்குகளை ஏமாற்றி பெற்று வந்த திமுகவுக்கு இனி முழுமையாக அந்த வாக்குகள் கிடைக்காது என்ற அச்சம் வந்து விட்டது.

ஏழைப் பெண்களின் திருமணம் தடையின்றி நடக்க வேண்டும் என்பதற்காக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா, தாலிக்கு தங்கத்துடன் கூடிய திருமண நிதியுதவி திட்டத்தை கொண்டு வந்தார். இதனால் 12 லட்சம் குடும்பத்தினர் பயனடைந்தனர். ஆனால், இந்த திமுக அரசின் பொம்மை முதல்வர் அந்த திட்டத்தை நிறுத்தி விட்டார். கருவுற்ற பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம், அம்மா குழந்தைகள் பெட்டகம், ஏழை மக்களின் வசதிக்காக 2,000 மினி கிளினிக்குகள், பணிக்கு செல்லும் பெண்களுக்கு மானிய விலையில் இருசக்கர வாகனம் ஆகிய திட்டங்களையும் நிறுத்தி விட்டனர்.

நீட் தேர்வு பற்றி முதல்வர் ஸ்டாலின் மற்றும் உதயநிதி ஆகியோர் பேசிவருகின்றனர். கடந்த 2010-ம் ஆண்டு திமுகவைச் சேர்ந்த காந்திச்செல்வன் மத்திய சுகாதாரத் துறை இணை அமைச்சராக இருந்தபோது தான் நீட் தேர்வுக்கு பிள்ளையார் சுழி போடப்பட்டது. காங்கிரஸும், திமுகவும் இணைந்து கொண்டுவந்தநீட் தேர்வை தற்போது எதிர்ப்பதும் அவ்விரு கட்சிகளும் தான். தமிழகத்தில் எங்கு பார்த்தாலும் போதைப்பொருள் விநியோகம் செய்யப்படுகிறது.இதனால் குற்றச் செயல்களும் அதிக அளவில் நடந்து வருகிறது. திமுக வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் 520 வாக்குறுதிகள் இருந்தன. அவற்றில் சிலவற்றை மட்டுமே நிறைவேற்றிவிட்டு, 100 சதவீதம் வாக்குறுதிகளையும் நிறைவேற்றி விட்டதாக முதல்வர் பச்சைப் பொய் பேசிவருகிறார். அனைத்து பெண்களுக்கும் மாதம் 1,000 வழங்கப்படும் என்று கூறிவிட்டு தற்போது, தகுதியுள்ளவர்களுக்கு மட்டுமே கொடுப்பேன் என்கிறார். அதுவும்கூட முழுமையாக பலருக்கு சென்று சேரவில்லை.

அரசுப் பள்ளிகளில் பயிலும் ஏழ்மை நிலையில் உள்ள மாணவ, மாணவியரின் மருத்துவர் கனவை நிறைவேற்றும் வகையில் கடந்த அதிமுக ஆட்சியின்போது அரசுப் பள்ளி மாணவர்களுக்கு மருத்துவப் படிப்பில் சேர 7.5 சதவீதம் சிறப்பு ஒதுக்கீடு திட்டம் கொண்டு வரப்பட்டது. இந்த திட்டத்தால் சுமார் 2,000 மாணவ, மாணவியர் மருத்துவம் படித்து வருகின்றனர். அவர்களுக்கான கல்விக் கட்டணத்தையும் அரசே செலுத்தியது. இவ்வாறு ஏழைகளின் ஏற்றத்துக்கான திட்டங்களை கொண்டு வந்தது தான் அதிமுக அரசு.

அதேபோல, ரேஷன் அட்டைதாரர்களுக்கு பொங்கல்விழாவின்போது அரசு சார்பில் பொங்கல் தொகுப்பு வழங்கப்பட்டது. ஆனால், திமுக ஆட்சியில் உருகும் வெல்லத்தை கொடுத்தனர். பொங்கல் பரிசுத் தொகுப்பு என்ற பெயரில் பெரிய அளவில் ஊழலில் ஈடுபட்டனர். திருவண்ணாமலை மாவட்டத்தில் தங்களின் உரிமைக்காக நேர்மையாக போராடும் விவசாயிகள் மீது குண்டர் சட்ட வழக்கு போடப்பட்டிருப்பது கண்டிக்கத்தக்கது. திமுகவைச் சேர்ந்த அமைச்சர் ஒருவர், ரூ.30 ஆயிரம் கோடி பணத்தை வைத்துக்கொண்டு அதை என்ன செய்வதென தெரியாமல் அக்கட்சி தலைமை தவிக்கிறது என கூறியிருந்தார். இவையெல்லாம், திமுக ஊழல் செய்வதற்காகவே ஆட்சிக்கு வந்துள்ளனர் என்பதைக் காட்டுகிறது. வரவிருக்கும் மக்களவை தேர்தலில் இதற்கெல்லாம் மக்கள் நல்ல பாடம் புகட்டுவார்கள்.

மன்னராட்சி முறையைப்போல, திமுக கட்சியினர் குடும்ப ஆட்சி நடத்தி வருகின்றனர். கருணாநிதிக்கு பின்னர் ஸ்டாலின். தற்போது ஸ்டாலினுக்கு பின்னர் உதயநிதியை முதலமைச்சராக்க திட்டமிட்டுவருகின்றனர். ஒருபோதும் இது நடக்காது. திமுகவில் கட்சி முன்னோடிகளுக்கும், முன்னாள் அமைச்சர்களுக்கும் வாய்ப்பில்லை. அடுத்த தேர்தல் எப்போது வந்தாலும் அதிமுக தான் வெற்றிபெறும், என்று அவர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், கே.பி.அன்பழகன், ஆர்.பி.உதயகுமார், என்.ஆர்.சிவபதி, எம்.சி.சம்பத், தளவாய்சுந்தரம், வீரமணி, முல்லைவேந்தன், பாலகிருஷ்ணரெட்டி உள்ளிட்ட முன்னாள் அமைச்சர்களும், முன்னாள் எம்.பி-க்கள் மற்றும் எம்எல்ஏ-க்கள், கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.



▶ தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில், மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை அனைத்துத் தரப்பினரும் வாங்கிடும் வகையில் மதி அனுபவ அங்காடி கட்டிடத்தினை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா. எழிலன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் ப. செந்தில்குமார், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மை செயலாக்க அலுவலர் ச.திவ்யதர்சினி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் (பொ) / வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மை இயக்க அலுவலர் சித்ரா விஜயன், மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர்கள், பொது மேலாளர் (பொ), இணை இயக்குநர்கள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திருச்செந்தூர் கோயிலில் கட்டண உயர்வு இல்லை அமைச்சர் சேகர்பாபு விளக்கம்



சென்னை, நவ. 20-

திருச்செந்தூர் முருகன் கோயிலில் அதிக அளவில் பக்தர்கள் வருவார்கள் என்பதால், சிறப்பு தரிசன கட்டணம் மட்டுமே ரூ.800-ல் இருந்து ரூ.1,000 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. மற்றபடிவேறுஎந்தகட்டணமும் உயர்த்தப்படவில்லை என்று அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு கூறினார்.

திருச்செந்தூர் முருகன் கோயிலில், கந்த சஷ்டி விழாவை முன்னிட்டு சிறப்பு தரிசன கட்டணம் பல மடங்கு உயர்ந்திருப்பதாகவும், சிறப்பு தரிசன கட்டணம் என பொதுமக்களிடம் ஆயிரம் ரூபாய் வசூலித்து, தரிசன சீட்டு கொடுக்காமல் சுவாமி தரிசனத்துக்கு அனுமதிப்பதாகவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு, சமூக வலைதளங்களில் வீடியோ ஒன்று வைரலானது.

அந்த வீடியோவில், சிறப்பு தரிசன பாதையில், அலுவலர் ஒருவர் நின்று, பக்தர்களிடம் ஆயிரம் ரூபாய் வாங்கி கொண்டு, தரிசன சீட்டு வழங்காமல் பக்தர்களை தரிசன பாதையில் உள்ளே அனுப்புவது போன்று பதிவாகி இருந்தது. மேலும், அந்த வீடியோவை எடுத்துக்கொண்டே பேசிய நபர், 'கந்த சஷ்டி விழாவை முன்னிட்டு, திருச்செந்தூர் முருகன் கோயிலில் வியாபாரம் கொடி கட்டி பறக்கிறது. ஒருவருக்கு ஆயிரம் ரூபாய் வாங்கி கொண்டு, தரிசன சீட்டு கொடுக்காமல் தரிசனத்துக்கு அனுப்புகிறார்கள்.

இது என்ன கணக்கு என்று புரியவில்லை' என பேசியபடி வீடியோவை பதிவு செய்திருந்தார். இந்நிலையில், சமூக வலைதளத்தில் இது தொடர்பான வீடியோவை வெளியிட்டவர் மீது திருச்செந்தூர் காவல் நிலையத்தில் இந்து சமய அறநிலையத் துறை அதிகாரிகள் புகார் அளித்துள்ளனர். அந்த புகாரில், 'ரூ.1000 கட்டண தரிசன வரிசையில் பணி செய்யும் சிறப்பு அலுவலர் நுழைவு சீட்டு வழங்குவதை முற்றிலும் மறைத்து, அலுவலர்கள் பணம் வாங்குவதை மட்டும் ஒரு கோணத்தில் வீடியோ எடுத்துள்ளனர்.

எனவே, சமூக வலைதளத்தில் பொய் தகவலை பரப்பியதாக திருச்செந்தூரை சேர்ந்த பிருதிவி ராஜ் என்பவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்' என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக திருச்செந்தூர் போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

இது குறித்து அமைச்சர் பி.கே.சேகர் பாபு கூறும்போது, "கடந்த 2018-ம் ஆண்டு அதிமுக ஆட்சியில் தான், விஸ்வரூப தரிசன கட்டணம் ரூ.500-ல் இருந்து ரூ.2 ஆயிரமாகவும், அபிஷேக கட்டணம் ரூ.500-ல் இருந்து ரூ.3 ஆயிரமாகவும் உயர்த்தப்பட்டது. இந்நிலையில், அறங்காவலர் குழு முடிவின்படி அறிவிப்பு வெளியிடப்பட்டு, பொதுமக்களிடம் கருத்து கேட்டு, ரூ.800 ஆக இருந்த சிறப்பு தரிசன கட்டணம், இந்தாண்டு முதல் ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டது.

அதேநேரத்தில், ரூ.100 சிறப்பு தரிசனத்திலும், பொது தரிசனத்திலும் மாற்றம் இல்லை. திருச்செந்தூர் முருகன் கோயிலுக்கு அதிக அளவில் பக்தர்கள் வருவார்கள் என்பதால்தான், விரைவாக சுவாமி தரிசனம் செய்வதற்கு ஏதுவாக, ஆயிரம் ரூபாய் கட்டணத்திற்கான சிறப்பு தரிசனம் வழங்கப்பட்டு வருகிறது. மற்றபடி, எந்த கட்டண உயர்வும் இல்லை. தரிசன கட்டணம் தொடர்பாக தவறான தகவல்களை பரப்புவோர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார்.

இதனிடையே அமைச்சர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், 'திருச்செந்தூர் கோயிலில் நீர்தேக்கத் தொட்டி, துணை மின் நிலையம், கலையரங்க கட்டிடம், முடி காணிக்கை மண்டபம், சூரசம்ஹார மண்டபம், அன்னதான மண்டபம் உள்பட 16 பணிகள் ரூ.206.45 கோடி செலவில் உபயதாரர் நிதியில் நடைபெற்று வருகின்றன. அதேபோல, திருமண மண்டபம், குடில்கள், வணிக வளாகம், பக்தர்கள் தங்கும் வளாகம், புதிய பேருந்து நிலையம் உட்பட 13 பணிகள் ரூ.99.90 கோடி செலவில் கோயில் நிதியில் நடைபெற்று வருகிறது' என்று அமைச்சர் பி.கே.சேகர் பாபு தெரிவித்துள்ளார்.

## "முரண்பாடுகளின் மொத்த உருவம் திமுக" தருமபுரியில் அதிமுக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் விமர்சனம்



தருமபுரி , நவ. 20-

திமுக அரசு முரண்பாடுகளின் மொத்த உருவமாக உள்ளது என தருமபுரியில் அதிமுக அமைப்புச் செயலாளர் டி.ஜெயக்குமார் தெரிவித்தார்.

தருமபுரி மாவட்ட அதிமுக ஜெ பேரவை செயலாளர் எஸ்.ஆர்.வெற்றிவேல் இல்லத் திருமண நிகழ்வில் பங்கேற்க அதிமுக கொள்கைப் பரப்பு செயலாளர் ஜெயக்குமார் இன்று(நவ.19) நேற்று தருமபுரி வந்தார். திருமண நிகழ்வில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியது: "பல்கலைக் கழக திருத்தச் சட்டங்கள் தொடர்பான 10மசோதாக்களை ஆளுநர் ஆர்.என்.ரவி திருப்பி அனுப்பிய நிலையில் தமிழக சட்டப்பேரவை சிறப்புக் கூட்டம் கூட்டப்பட்டு மீண்டும் அந்த மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இந்த விவகாரம் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு உள்ள நிலையில் சிறப்புக் கூட்டம் கூட்டி மசோதாக்களை நிறைவேற்ற வேண்டிய அவசியம் என்ன?

1994-ம் ஆண்டு அதிமுக ஆட்சியின்போது அன்றைய முதல்வர் ஜெயலலிதா, பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்கள் பதவியை மாநில முதல்வரே வகிக்கலாம் என்ற சட்டத்தை கொண்டுவந்தார். ஆனால், 1996-ம் ஆண்டில் திமுக ஆட்சியின்போது அமைச்சராக இருந்த பேராசிரியர் க.அன்பழகன், 'இந்த சட்டம் பல்கலைக் கழகங்களின் தனித்தன்மையை பாதிக்கும்' என்று கூறி அந்த சட்டத்தை எதிர்த்தார். இன்று திமுகவினர் அதற்கு எதிர்மாறான நிலைப்பாட்டில் உள்ளனர். மாமியார் உடைத்தால் மண் சட்டி, மருமகள் உடைத்தால் பொன் சட்டி என்ற கொள்கை கொண்ட திமுக, முரண்பாடுகளின் மொத்த உருவமாக உள்ளது. ஆளுநர் தலையாட்டி பொம்மையாக இருக்க வேண்டும் என திமுக நினைக்கிறது. திமுகவின் விருப்பத்துக்கு உட்பட்டு செயல்படும் நபராக இல்லையெனில், ஆளுநர் நாட்டுக்கு தேவையில்லை என்கிறது திமுக.

17 ஆண்டுகள் மத்தியில் ஆட்சியில் இருந்த கட்சியுடன் அங்கம் வகித்த திமுக, ஆளுநருக்கான அதிகாரங்கள் தொடர்பான வரையறைகளை அமல்படுத்தி இருந்தால் எதிர்காலத்தில் இந்த பிரச்சினைகள் எதுவும் வந்திருக்காது. ஆளுநருக்கும், அரசுக்கும் இடையே மோதல் போக்கும் ஏற்பட்டிருக்காது. எதிர்கட்சியாக உள்ளபோது ஒரு நிலைப்பாடு, ஆளும் கட்சியாக இருக்கும்போது ஒரு நிலைப்பாடு என தேவைக்கு ஏற்ப பச்சோந்தி தனமான செயல்பாடு கொண்டதாக திமுக உள்ளது.

2018-ம் ஆண்டு, மீன்வள பல்கலைக் கழகத்துக்கு முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பெயரை சூட்ட அன்றைய அதிமுக ஆட்சியில் அரசாணை வெளியிடப்பட்டது. அதை இன்றைய திமுக அரசு கைவிட்டுள்ளது. மாநில உரிமைகளை தாரை வார்த்துக் கொடுத்தது திமுக அரசு தான். அதிமுகவைப் பொறுத்தவரை எங்களுக்கென ஒரு தனித்தன்மை உள்ளது. இரட்டை நிலைப்பாட்டுடன் என்றுமே அதிமுக இருக்காது", என்று அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியின் போது, முன்னாள் அமைச்சர் கே.பி. அன்பழகன், எம்எல்ஏ கோவிந்தசாமி உள்ளிட்ட பலரும் உடனிருந்தனர்.

## தனி நீதிபதியின் உத்தரவால் பொதுநலன் பாதிக்கப்படுவதாக புகார்: உயர் நீதிமன்றம் அதிரடி உத்தரவு



மதுரை, நவ. 20-

10 சக்கரத்திற்கும் மேல் உள்ள 700 லாரிகளில் கனிமங்கள் கொண்டு செல்ல அனுமதித்த தனி நீதிபதியின் உத்தரவுக்கு உயர்நீதிமன்ற மதுரை கிளை தடை விதித்துள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம், இளஞ்சிறையைச் சேர்ந்த பினோய், உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்த மனுவில், "10 சக்கரத்திற்கு மேல் உள்ள வாகனங்களில் கனிமங்கள் கொண்டு செல்ல தடை விதித்து கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டுள்ளார். இதனால், கேரளா மற்றும் தமிழ்நாட்டில் பலவகையான கட்டுமானப் பணிகள் பாதித்துள்ளன. எனவே, அந்த உத்தரவிற்கு இடைக்காலத் தடை விதிக்க வேண்டும்" என கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த மனுவை விசாரித்த தனி நீதிபதி, 10 சக்கரத்திற்கும் மேற்பட்ட 700 லாரிகளில் தினமும் கனிமங்கள் கொண்டு செல்ல அனுமதித்து உத்தரவிட்டிருந்தார். தனி நீதிபதியின் இந்த உத்தரவை எதிர்த்து கனிமவளத்துறை கூடுதல் தலைமை செயலர், போக்குவரத்து துறை ஆணையர் ஆகியோர் தரப்பில் உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்த மனுவை நீதிபதிகள் எஸ்.எம்.சுப்ரமணியம், வி.லட்சுமிநாராயணன் ஆகியோர் விசாரித்தனர்.

கூடுதல் அட்வகேட் ஜெனரல் வீரா கதிரவன் ஆஜராகி, "தமிழ்நாட்டில் இருந்து அதிகளவில் கனிமங்கள் கொண்டு செல்வதால் சுற்றுச்சூழல் மட்டுமின்றி, சாலைகளும் பாதிக்கிறது. வாகனத்தின் எடை மற்றும் வேகத்தின் அளவை கட்டுப்படுத்தும் அதிகாரம் அரசுக்கு உண்டு. பொதுநலன் கருதியே அரசு முடிவெடுத்தது. தனி நீதிபதியின் உத்தரவால் பொதுநலன் மட்டுமின்றி, அரசின் கொள்கை ரீதியான முடிவும் பாதிக்கிறது. எனவே, தனி நீதிபதியின் உத்தரவிற்கு தடை விதிக்க வேண்டும்" என்றார்.

இதையடுத்து நீதிபதிகள், தினமும் 700 லாரிகளில் கனிமங்கள் கொண்டு செல்லலாம் என்ற தனி நீதிபதியின் உத்தரவிற்கு இடைக்காலத் தடை விதித்தனர். மேலும் தனி நீதிபதியிடம் நிலுவையில் உள்ள பிரதான வழக்கின் விசாரணையை விரைந்து முடிக்கவும், வழக்கு தொடர்ந்தவர்கள் தரப்பில் பதிலளிக்கவும் உத்தரவிட்டு விசாரணையை 2 வாரம் தள்ளி வைத்தனர்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்

"உங்களுக்குள் நீங்கள் நல்ல சமநிலையுடன் இருக்கும்போது மட்டும்தான், உங்கள் புத்திசாலித்தனம், திறமை மற்றும் ஆற்றல் முழுமையாக வெளிப்படும்."






# தென்காசியில் காங்கிரஸ் சார்பில் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் பிறந்தநாள் விழா



தென்காசி,நவ.20–

தென்காசியில் நகர காங்கிரஸ் கட்சியின் சார்பில் முன்னாள் பாரத பிரதமர் அன்னை இந்திரா காந்தியின் பிறந்தநாள் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு நகர காங்கிரஸ் தலைவர் மாடசாமி ஜோதிடர், தலைமை வகித்து இந்திரா காந்தியின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார், இந்நிகழ்ச்சியில் மாவட்ட பொதுச் செயலாளர் ஏஜிஎம். கணேசன், நகரப் பொருளாளர் ஈஸ்வரன், கவுன்சிலர் சுப்பிரமணியன்,33வது வார்டு செயலாளர் முத்தையா உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் பலர் இதில் கலந்து கொண்டனர், முடிவில் மாவட்ட பொதுச் செயலாளர் ஏ.ஜி.எம் கணேசன் அனைவருக்கும் நன்றி கூறினார்.



புதுக்கோட்டை மாவட்ட காங்கிரஸ் கட்சியின் சார்பில் முன்னாள் இந்திய பிரதமர் இந்திரா காந்தியின் பிறந்த நாள் விழா காங்கிரஸ் கட்சியின் அலுவலகத்தில் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் உறுப்பினரும் புதுக்கோட்டை நகராட்சி நகர்மன்ற முன்னாள் தலைவருமான துரை. திவியநாதன் தலைமையில் செயற்குழு உறுப்பினர் தனபதி, மாநில சிறுபான்மை பிரிவு துணை தலைவர் இப்றாஹீம் பாபு, நகரத் தலைவர்கள் மதன் கண்ணன், பாருக், ஜெய்லானி, புதுக்கோட்டை வட்டாரத் தலைவர் சூர்யா பழனியப்பன், மாவட்ட துணை தலைவர் தீன், ஓபிசிஅணி மாவட்ட தலைவர் வீர.துரைசிங்கம் ஆகியோர் முன்னிலையில் இந்திரா காந்தியின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்தும் இனிப்புகள் வழங்கியும் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் செம்பாட்டூர் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் செம்பைமணி, நகர்மன்ற உறுப்பினர் ராஜா முகமது, தகவல் உரிமை அணி மாவட்ட தலைவர் மதன் சேகர், ரஞ்சித், ஓபிசி அணியின் பொதுச் செயலாளர் ஆனந்த், அப்துல் காதர், காதர் மைதீன், முகமது யூசுப், கீரனூர் நகரத் தலைவர் பாஸ்கர், சமாதானமேரி, தினேஷ் உள்பட ஏராளமான காங்கிரஸ் கட்சியினர் கலந்து கொண்டனர்.

# அரியலூரில் இந்திரா காந்தி பிறந்த நாள் விழா

அரியலூர்,நவ.20–

அரியலூரில் முன்னாள் பாரத பிரதமர் இந்திரா காந்தி பிறந்த நாள் விழா காங்கிரஸ் கட்சி சார்பில் கொண்டாடப்பட்டது, இது பற்றி அரியலூர் நகர காங்கிரஸ் கமிட்டித் தலைவர் சிவகுமார் வெளியிட்ட செய்தி குறிப்பில் கூறியுள்ளதாவது:

முன்னாள் பாரத பிரதமர் அன்னை இந்திரா காந்தியின் 106 வது பிறந்தநாள், அரியலூர் மாவட்ட, நகர வட்டார காங்கிரஸ் கமிட்டி சார்பாக, அரியலூர் பெருந்தலைவர் காமராஜர் மற்றும் மகாத்மா காந்தி சிலை அருகே கொண்டாடப்பட்டது, விழாவிற்கு மாவட்டத் தலைவர் ஆ. சங்கர் தலைமை வகித்தார், விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் அரியலூர் வடக்கு வட்டாரத் தலைவர் கர்ணன் வரவேற்றார், மாநில பொதுக்குழு உறுப்பினர் ராஜசேகர் மற்றும் வட்டாரத் தலைவர்கள் திருநாவுக்கரசு அழகானந்தம், கங்காதுரை, பூண்டி சந்தானம், மாவட்ட துணைத் தலைவர்கள் ஏபிஎஸ் பழனிச்சாமி, ரவிச்சந்திர போஸ், பிரஸ் செந்தில், கலைச்செல்வன், சண்முகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அரியலூர் நகர காங்கிரஸ் கமிட்டித் தலைவர் மாமு. சிவகுமார் நன்றி கூறினார்,

விழாவில் நகரப் பொறுப்பாளர்கள் மாவட்ட சேவா தளம் தலைவர் சிவா, அரியலூர் நகரப் பொறுப்பாளர்கள் தொழிற்சங்க தலைவர் அன்பழகன், மணிகண்டன், ரவிக்குமார், மும்மூர்த்தி, வரதராஜன் மகளிர் அணி ரேணுகாதேவி மற்றும் வட்டார, நகர, பொறுப்பாளர்கள் திரளாக கலந்து கொண்டனர், இறுதியில் பொது மக்களுக்கு சர்க்கரை பொங்கல் வழங்கப்பட்டது








தென்காசி வடக்கு மாவட்ட திமுக செயலாளரும், சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினருமான ராஜா தனது பிறந்த நாளை முன்னிட்டு திமுக மாநில இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலினை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

# "திருச்செந்தூர் முருகன் கோயில் கட்டண கொள்ளையை சேகர்பாபு மறைக்கிறார்" – எல்.முருகன்



சென்னை : நவ. 20, திருச்செந்தூர் முருகன் கோயிலில் நடக்கும் கட்டணக் கொள்ளையை அமைச்சர் சேகர்பாபு மறைக்கிறார் என மத்திய இணை அமைச்சர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: திருச்செந்தூர் முருகன் கோயிலில் சஷ்டி திருவிழாவை முன்னிட்டு இந்து சமய அறநிலையத் துறை பக்தர்களிடம் ஆயிரம், இரண்டாயிரம், மூவாயிரம் என வசூல் வேட்டை நடத்தி வருகிறது. தமிழக அரசின் இந்த கட்டணக் கொள்ளை பக்தர்களை பெரும் அதிர்ச்சியில் ஆழ்த்தி உள்ளது.

பக்தர்களிடம் நேரடியாக பணத்தை வாங்கிக்கொண்டு, அதிகாரிகள் சிலர் முறைகேடாக அனுமதிக்கும் வீடியோ சமூக ஊடகங்களில் வெளிவந்துள்ளது. ஆனால் காவல் துறை, அரசு அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. திருச்செந்தூரில் சஷ்டி திருவிழாவுக்காக உயர்த்தப்பட்டுள்ள கட்டண தரிசனத்தை அனைத்து வெள்ளி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலும் அமல்படுத்தி வசூல் வேட்டை நடத்தலாம் என்ற எண்ணத்தில் அறநிலையத் துறை இருப்பதாக தெரிகிறது.

திருச்செந்தூர் கோயிலில் தரிசன கட்டண விவகாரத்தில் ஏற்கெனவே நீதிமன்றம் தலையிட்டு உத்தரவிட்டுள்ளது. இதையும் பொருட்படுத்தாமல் தொடர்ந்து கட்டணக் கொள்ளையில் அறநிலையத்துறை ஈடுபடுவது சட்டவிரோத செயலாகும். ஆனால் அறநிலையத்துறை அமைச்சர் சேகர் பாபு, கட்டணக் கொள்ளையை மறைப்பதிலேயே ஆர்வம் காட்டி வருகிறார். திருச்செந்தூரில் எந்தவித கட்டணமும் உயர்த்தப்படவில்லை, ஏற்கெனவே உள்ளதுதான் என அவர் அளிக்கும் விளக்கத்தை யாரும் ஏற்க மாட்டார்கள்.

திருச்செந்தூர் கோயிலில் நடக்கும்கட்டணக்கொள்ளையை மறைப்பதை நிறுத்திவிட்டு, அறநிலையத்துறை அமைச்சர் என்ற முறையில் அவர், கட்டணக் கொள்ளையை நிறுத்த முன்வர வேண்டும். இந்து சமய அறநிலையத் துறை உயர்த்தி உள்ள கட்டணங்களை உடனடியாக திரும்பப்பெற வேண்டும். எந்த வகையிலும் சுவாமி தரிசனம் செய்ய கட்டணம் வசூலிக்கக் கூடாது.



மதுரை புறநகர் கிழக்கு மாவட்டம் திருப்பரங்குன்றம் சட்டமன்றத் தொகுதி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழக தகவல் தொழில்நுட்பம் பிரிவு சார்பாக எம். ஆர். சி. மஹாலில் பூத் கமிட்டி உறுப்பினர்கள் பயிற்சி பட்டறை மற்றும் ஆலோசனைக் கூட்டம், புறநகர் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் வி.வி. ராஜன் செல்லப்பா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கழக தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் வி.வி. ஆர் ராஜ் சத்யன் அதிமுக அமைப்புச் செயலாளர் வி.வி. ராஜன் செல்லப்பா தொழில்நுட்ப பிரிவு வி.வி.ஆர். ராஜ் சத்யன் பொன்னாடை போற்றி வரவேற்ற போது எடுத்த படம், உடன் தகவல் தொழில்நுட்ப பிரிவு ராமச்சந்திரன், இணைச்செயலாளர் கோவை சக்தியன், நிர்மல் குமார், பிரசாத், சிவ ஆனந்த், அதிமுக அமைப்புச் செயலாளர் ஆர். காந்தி, மேலூர் சட்டமன்ற உறுப்பினர் பெரிய புள்ளான், வக்கீல் ரமேஷ், ஒன்றிய கழகச் செயலாளர் நிலையூர் முருகன் மற்றும் பலர் உள்ளனர்.

# "பாரத் மாதா கி ஜெய்க்கு பதிலாக.." – அதானியை வைத்து பிரதமர் மோடியை சாடிய ராகுல் காந்தி



ஜெய்ப்பூர் : நவ. 20, பிரதமர் மோடி 24 மணிநேரமும் தொழிலதிபர் அதானிக்காக வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார் என்று காங்கிரஸ் முக்கியத் தலைவர் ராகுல் காந்தி குற்றஞ்சாட்டியுள்ளார். மேலும் அதானிக்காக பிரதமர் வேலை செய்வதால் அவர் 'பாரத் மாதா கி ஜெய்' என்பதற்கு பதிலாக, 'அதானி ஜி கி ஜெய்' என்று சொல்ல வேண்டும் என்று கூறினார்.

ராஜஸ்தான் மாநிலம் பண்டி மாவட்டத்தில் நடந்த தேர்தல் பேரணிக் கூட்டத்தில் காங்கிரஸ் முக்கிய தலைவரும், வயநாடு எம்பியுமான ராகுல் காந்தி கலந்து கொண்டார். அப்போது பேசிய அவர், "ஏழைகள், விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் தான் பாரத மாதா; நாட்டில் இவர்களின் பங்களிப்பு உறுதி செய்யப்படும் போது பாரத மாதாவுக்கு ஜெயத்தை உண்டாகும்.

ஆனால் பிரதமர் மோடி பணக்காரர்களுக்கு ஓர் இந்தியா, ஏழைகளுக்கு ஓர் இந்தியா என இரண்டு இந்தியாக்களை உருவாக்க விரும்புகிறார். என்ன நடந்தாலும் மோடி ஒருபோதும் சாதி வாரி கணக்கெடுப்பை நடத்த மாட்டார். ராகுல் காந்தியும், காங்கிரஸ் கட்சியும் அதைச் செய்வார்கள்" என்று ராகுல் காந்தி பேசினார்.

பாஜக அரசால் அதானி குழுமம் அதிக ஆதாயம் அடைந்துள்ளதாக தொடர்ந்து குற்றம்சாட்டிவரும் காங்கிரஸ் கட்சி, அதானி குழுமம் குறித்த அமெரிக்காவின் ஹிண்டன்பர்க் அறிக்கை குறித்து நாடாளுமன்ற கூட்டுக் குழு விசாரணை நடத்த வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. ஆனால் அதானி குழுமம் இந்தக் குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளது.

# 6 முதல் 12–ம் வகுப்பு மாணவர்களுக்கு முக்கிய அறிவிப்பு : அரையாண்டு தேர்வு அட்டவணை



சென்னை, நவ. 20–

நடப்பு கல்வி ஆண்டில் 6 முதல் 12-ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கான, அரையாண்டு தேர்வுக் கால அட்டவணை பள்ளிக் கல்வித்துறையால் வெளியிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து பள்ளிகல்வி துறை சார்பில் அனைத்து பள்ளிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கையில், " 6 முதல் 12-ம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு இந்த கல்வி ஆண்டிற்கான அரையாண்டு தேர்வு டிசம்பர் மாதம் நடைபெற உள்ளன.

மாணவர்கள் நலன் கருதி, அதற்கான உத்தேச கால அட்டவணை தற்போது வெளியிடப்பட்டுள்ளது. 6-ம் வகுப்பு முதல் 10-ம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு டிசம்பர் 11-ம் தேதி தொடங்கி, 21-ம் தேதி தேர்வுகள் முடிவடைகின்றன.

அதேபோல் 11 மற்றும் 12-ம் வகுப்புகளுக்கு டிசம்பர் 7-ம் தேதி தொடங்கி 22-ம் தேதி வரை தேர்வுகள் நடைபெறுகின்றன. சிறப்பு குழு சார்பில் 6-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரையில் இரண்டு விதமான கேள்வித் தாள்கள் தயாரிக்கப்பட உள்ளன. மேலும் இம்முறை மாநிலம் முழுவதும் ஒரே கேள்வித் தாள்களாக இருக்கும் என தெரிவிக்கபட்டுள்ளது.

மேலும், தமிழகம் முழுவதும் அனைத்து அரசு மற்றும் அரசு உதவிப்பெறும் பள்ளிகளில் வினாத்தாள் பதிவிறக்கம் செய்ய வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. இதில் 6-ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரை காலை 10 மணி முதல் மதியம் 12.30 மணி வரையிலும், 9, 10-ம் வகுப்புகளுக்கு மதியம் 2 மணி முதல் மாலை 4.30 வரையிலும் தேர்வானது நடைபெறவுள்ளது.

12-ம் வகுப்புக்கு காலை 9.30 மணி முதல் 09.40 வரையிலான 10 நிமிடங்கள் வினாத் தாள்களை படிக்க நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. 09.40 முதல் 09.45 வரையிலான 5 நிமிடங்கள், விடைத்தாளைப் பூர்த்தி செய்யவும் நேரம் அளிக்கப்படும். அதன் பிறகு 09.45 மணியில் இருந்து மதியம் 12.45 மணி வரை தேர்வானது நடைபெறும்.

இதேபோல் 11-ம் வகுப்புகளுக்கு மதியம் 01.15 முதல் மாலை 4.30 வரை தேர்வு நடைபெறும். இதில் 1.15 முதல் 1.30 வரை வினாத் தாள்களை படிக்கவும், விடைத்தாளை பூர்த்தி செய்யவும் நேரம் தனியாக ஒதுக்கப்பட்டுள்ளது.

# சீர்காழி அருகே ரயில்வே கேட் கீப்பரிடம் வழிப்பறியில் ஈடுபட்ட மூன்று பேர் கைது. போலீசார் விசாரணை



சீர்காழி,நவ,20

கேரள மாநிலம் அயன்சேரி பகுதியை சேர்ந்தவர் விஜின். 40. இவர் மயிலாடுதுறை மாவட்டம் வைத்தீஸ்வரன்கோவில் அருகே கன்னியாகுடி ரயில்வே கேட் கீப்பராக பணியாற்றி வருகிறார்.

கடந்த 12 ஆம் தேதி இரவு வைத்தீஸ்வரன்கோவிலில் இருந்து சைக்கிளில் பணிக்குச் சென்ற விஜினை, இருசக்கர வாகனத்தில் வந்த மூன்று நபர்கள் வழிமறித்து 3,400 ரூபாய் பணத்தை வழிப்பறி செய்ததுடன், கொலை மிரட்டல் விடுத்து இருசக்கர வாகனத்தில் சென்றுள்ளனர்.

இது குறித்து வைத்தீஸ்வரன்கோவில் காவல் நிலையத்தில் விஜின் புகார் அளித்ததன் பேரில், போலீசார் வழக்குப் பதிந்து விசாரணை மேற்கொண்டு வந்தனர். இந்நிலையில் ரகசிய தகவலின் பேரில் போலீசார் வைத்தீஸ்வரன்கோவிலில் சுற்றித்திரிந்த புலவனூர் கிராமத்தைச் சேர்ந்த கணேசன் மகன் கவியரசன்.25, ஆனந்தன் மகன் அபிஷேக்.20, கடலூர் மாவட்டம் தர்மநல்லூர் ஜெயக்குமார் மகன் ஜெயகாந்தன்.19. ஆகிய மூன்று நபர்களையும் கைது செய்து அவர்களிடம் இருந்த இருசக்கர வாகனங்களை பறிமுதல் செய்தனர்.

# ஆளுநர் ரவி டெல்லிக்கு நேற்று திடீர் பயணம் அமித் ஷாவை சந்திப்பதாக பரபரப்பு தகவல்



சென்னை, நவ. 20–

தமிழ்நாடு ஆளுநர் ஆர். என்.ரவி நேற்று மாலை திடீர் பயணமாக டெல்லி சென்றார். அங்கு மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை அவர் சந்திக்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

நிலுவையில் உள்ள மசோதாக்கள் தொடர்பாக ஆளுநர் முடிவெடுக்காததைக் கண்டித்து தமிழ்நாடு அரசு சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனுவை விசாரித்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள், ஆளுநருக்கு கண்டனம் தெரிவித்திருந்தனர். இந்த நிலையில் அவசர அவசரமாக நிலுவையில் உள்ள 10 மசோதாக்களை ஆளுநர் மாளிகை தமிழ்நாடு அரசுக்கு திருப்பி அனுப்பியது.

இதையடுத்து சென்னையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற சிறப்பு சட்டப்பேரவை கூட்டத்தில், மீண்டும் 10 மசோதாக்களும் நிறைவேற்றப்பட்டு ஆளுநர் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த பரபரப்பான அரசியல் சூழலில் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி நேற்று மாலை 5.15 மணிக்கு சென்னையில் இருந்து விமானம் மூலம் அவர் டெல்லி சென்றார். அங்கு மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா மற்றும் சட்ட நிபுணர்களைச் சந்தித்து அவர் ஆலோசனை நடத்த உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இந்த பயணத்தின் போது, தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுக்கள் மீது எதிர்வாதம் வைப்பது தொடர்பான ஆலோசனைகள் நடத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆளுநரின் இந்த திடீர் டெல்லி பயணம், தமிழ்நாடு அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



தென்காசி வடக்கு மாவட்டம் சிந்தாமணியில் நீட் விலக்கு நம் இலக்கு என்ற விழிப்புணர்வு பிரச்சார பயணம் கன்னியாகுமரியில் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார், சேலம் இளைஞர் அணி மாநாடு பிரச்சார இரு சக்கர வாகன பேரணி மேற்கொண்டுள்ள இளைஞர் அணி படையினரை தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்எல்ஏ தலைமையில், புளியங்குடி நகரச் செயலாளர் எ. அந்தோணிசாமி தலைமை செயற்குழு உறுப்பினர் யு.எஸ்.டி சீனிவாசன், நகர் மன்றத் தலைவி விஜயா சௌந்தர பாண்டியன் முன்னிலையில் மாவட்டப் பொறுப்பாளர்கள் ,நகரக் கழக வார்டு, நகர் மன்ற உறுப்பினர்கள் முன்னிலையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது, நேற்று 19ஆம் தேதி பிறந்தநாள் கண்டசங்கரன்கோவில் எம்எல்ஏ ராஜாவுக்கு சேலம் இளைஞர் அணி பிரச்சார இருசக்கர வாகன குழுவினர் மாலை அணிவித்து பொன்னாடை போர்த்தி கேக் வெட்டி ராஜாவின் பிறந்தநாளை சிந்தாமணி நகரக் கழக அலுவலகத்தில் திமுக நிர்வாகிகள் உற்சாக வரவேற்பளித்து பிறந்தநாள் நிகழ்ச்சியை கொண்டாடினர்.



சென்னை திருவொற்றியூரை சேர்ந்த மாலை முரசு நிருபரும், மூத்த பத்திரிகையாளருமான ஆ.முருகன் மகன் எம்.பிரகாஷ் எஸ்.பவித்ரா ஆகியோரின் திருமணம் வரவேற்பு நிகழ்ச்சி புது வண்ணாரப்பேட்டை, டோல்கேட்டில் உள்ள தங்கம் மாளிகையில் நடைபெற்றது. இந்த திருமண வரவேற்பு விழாவிற்கு வருகை தந்த அதிமுக வின் முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார் மணமக்களுக்கு வாழ்த்துகள் தெரிவித்தார் . உடன் பத்திரிகையாளர் முருகன் உள்ளார்.

### திருவொற்றியூர் மாநகராட்சி மண்டல குழு கூட்டத்தில்

# வாக்குவாதத்தில் மோதிக்கொண்ட திமுக மற்றும் சுயேட்சை மாமன்ற உறுப்பினர்

சென்னை, நவ,20

பெருநகர சென்னை மாநகராட்சிமாமன்ற உறுப்பினர்களுக்கான மாதாந்திர மண்டல குழு கூட்டமானது மாதந்தோறும் அந்தந்த மண்டலங்களில் நடைபெறுவது வழக்கம் சென்னை திருவொற்றியூர் மாநகராட்சி ஒன்றாவது மண்டலத்தில் மாமன்ற உறுப்பினருக்கான கூட்டம் நடைபெற்றது.



மண்டலகுழுதலைவர் தனியரசு தலைமையில் 1 முதல் 14 வார்டு வரை உள்ள கவுன்சிலர்கள் பங்கேற்ற மண்டல குழு கூட்டம் நடைபெற்றது கூட்டத்தில் 12 கோடி திட்டங்களுக்கான 52 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதில் ஒன்றாவது வார்டு திமுக மாமன்ற உறுப்பினருக்கும் இரண்டாவது வார்டு சுயேட்சைஉறுப்பினருக்கும் ஒரே வளாகத்தில் மாமன்ற உறுப்பினர் அலுவலகம் இருப்பதால் தமக்கு தனியாக அலுவலகம் வேண்டுமென 2 வார்டு சுயேட்சை உறுப்பினரான கோமதி சந்தோஷ் மண்டலகுழுதலைவரிடம் முறையிட்டார்.

ஒரே வளாகத்தில் அமைந்திருப்பதால் அலுவலக நிர்வாகத்தில் திமுக கவுன்சிலர் தலையிடுகிறார் என குற்றசாட்டு வைத்தார் ஆதாரமில்லாமல் சுயேச்சை கவுன்சிலர் கூறுகிறார் என்று நிருபிக்க முடியுமா? என சவால் விட்டார்.

சுயேட்சை என்ற வார்த்தையை பயன்படுத்த வேண்டாம் என ஆவேசமாக கூறிய பெண்மாமன்றஉறுப்பினர் கோமதி சந்தோஷிற்கு பதிலளிக்கும் வகையில் சுயேட்சைவேட்பாளரை சுயேட்சை என்று சொல்லாமல் வேறு என்ன கூறுவது என நக்கலடிக்க இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது.

இதனை அடுத்து பேசிய ஏழாவது வார்டு அதிமுக கவுன்சிலர் கார்த்திக் அதிகாரிகள் பணி நேரத்தில் மது அருந்திவிட்டு வேலை செய்வதாகவும் கையும் களவுமாக பிடித்து கொடுத்தால் நடவடிக்கை எடுக்கவில்லை என குற்றச்சாட்டு வைத்தார்.

மேலும் மழைநீர் கால்வாய்க்காக மின்விளக்கு கம்பங்கள் அகற்றப்பட்டதால் தெருவிளக்கு இல்லாமல் மக்கள்மிகவும்அவதிப்பட்டு வருவதாகவும்மீண்டும் மக்களுக்கு சாலைவிளக்கு அமைத்த தரவேண்டும் என கோரிக்கை வைத்தார் ஆனால் இதற்கு முறையான பதில் அளிக்காததால் ஏழாவது வார்டை திட்டமிட்டு புறக்கணிப்பதாக கூறி வெளிநடப்பு செய்தார்.

திமுக மற்றும் சுயேட்சை கவுன்சர்களின் வாக்குவாதத்தால் மண்டலகுழு கூட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது



காரைக்கால் மாவட்டம் நிர்வாகம் சார்பாக மறைந்த முன்னாள் பாரதப் பிரதமர் இந்திரா காந்தி பிறந்த நாள் விழா தேசிய ஒருமைப்பாட்டு வார விழாவாக நேற்று கொண்டாடப்பட்டது. இதனை முன்னிட்டு காலை 10.00 மணியளவில் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்ட இந்திராகாந்தி திருவுருவ படத்திற்கு சட்டமன்ற உறுப்பினர் .சந்திர பிரியங்கா மற்றும் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் ஆகியோர் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள். மேலும் இந்நிகழ்வில் முதுநிலை காவல் கண்காணிப்பாளர் (பொறுப்பு) நித்தின் கவுஹால் ரமேஷ் துணை மாவட்ட ஆட்சியர்கள் ஜான்சன் மற்றும் வெங்கடகிருஷ்ணன், கல்வித்துறையின் மேல்நிலைக் கல்வி துணை இயக்குனர் ராஜேஸ்வரி. முதன்மை கல்வி அதிகாரி விஜய மோகனா மற்றும் அரசு அதிகாரிகள் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள். மேலும் மும்மத பிரார்த்தனைகள் மற்றும் தேசபக்தி பாடல்கள் பாடப்பட்டு தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்பட்டன. மேலும் தேசிய ஒருமைப்பாட்டு வார விழாவை முன்னிட்டு மாவட்ட நிர்வாகம் மற்றும் பல்வேறு துறைகளின் சார்பாக 25 11 2023 வரை பல்வேறு நிகழ்வுகள் நடைபெற உள்ளன.

# சீர்காழி அருகே மரத்தின் நடுவே குலை தள்ளிய அதிசய வாழை மரம்: பொதுமக்கள் ஆச்சரியத்துடன் பார்த்து சென்றனர்

சீர்காழி,நவ,20

மயிலாடுதுறை மாவட்டம்சீர்காழிஅருகே திருமுல்லைவாசல் கிராமத்தில் உள்ள மீனவர் தெருவை சேர்ந்தவர் கலியமூர்த்தி. இவருடைய வீட்டின் தோட்டத்தில் வாழை மரங்கள் வளர்த்து வருகிறார்.



இதில் ஆறடி உயரம் வளர்ந்த பூவன் வகையை சேர்ந்த ஒரு வாழைமரத்தில் நான்கு அடிஉயரத்திற்கு மரத்தின் நடுப்பகுதியில் கடந்த 2 மாதங்களுக்கு முன்பு குலைதள்ளியது. பின்னர் பூவில் இருந்து காய்கள் காய்த்து தற்போது வாழைத்தாராக காட்சியளிக்கிறது.

பொதுவாக வாழை மரங்கள் மேற்பகுதியில் இலைகளுக்கு இடையே இருந்தே குலைதள்ளுவது வழக்கம். ஆனால் மரத்தின் இடையே குலை தள்ளிய இந்த அதிசய வாழை மரத்தை பொதுமக்கள் ஆச்சரியத்துடன் பார்த்து செல்கின்றனர்.

# சீர்காழி அருகே பழமை வாய்ந்த வலம்புரி விநாயகர் மற்றும் முருக பெருமான் கோவில்களின் கும்பாபிஷேகம்





சீர்காழி,நவ,20

மயிலாடுதுறை மாவட்டம் கொள்ளிடம் அருகே ஆலாலசுந்தரம் கிராமத்தில் நூற்றாண்டுகள் பழமை வாய்ந்தமுருகப்பெருமான் கோவில் அமைந்துள்ளது. கோவிலின் திருப்பணிகள் செய்யப்பட்டு அருகிலேயே வலம்புரி விநாயகருக்குதனிகோவில் அமைக்கப்பட்டுள்ளது.

இக்கோவில்களின் கும்பாபிஷேகம் நேற்று நடைபெற்றது. கும்பாபிஷேகத்தை முன்னிட்டு கடந்த 17ஆம் தேதி முதல் கால யாகசாலை பூஜை தொடங்கப்பட்டது.

நேற்று 4ம் கால யாகசாலை பூஜைகள் நிறைவடைந்து, பூர்ணாஹூதி மற்றும் மகா தீபாராதனை நடத்தப்பட்டது. தொடர்ந்து யாகசாலையில் இருந்து கடங்கள் புறப்பாடு செய்யப்பட்டு கோவிலை வலம் வந்து விமானத்தை அடைந்தன.

மங்கள வாத்தியங்கள் மற்றும் சிவ வாத்தியங்கள் இசைக்க, சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் ஓத, மௌன மடம் சுவாமிகள் முன்னிலையில் கலசத்தில் வைத்து பூஜிக்கப்பட்ட புனித நீரை கொண்டு விநாயகர் மற்றும் விமான கலசங்களுக்கு கும்பாபிஷேகம் நடத்தி வைக்கப்பட்டது. தொடர்ந்து முருகப் பெருமானுக்கும், விநாயகருக்கும் அபிஷேக ஆராதனைகள் நடத்தப்பட்டன.

பல்வேறு கிராமங்களில் இருந்து வந்திருந்த திரளான பக்தர்கள் கலந்துகொண்டு தரிசனம் செய்தனர். கும்பாபிஷேகத்தை சர்வ சாதகம் ஆச்சாள்புரம் சம்பந்த சிவாச்சாரியார், கோவில் அர்ச்சகர் கபாலீஸ்வரர் சிவாச்சாரியார் தலைமையிலானோர் நடத்தி வைத்தனர்.

கும்பாபிஷேகம் ஏற்பாடுகளை நல்லூர் வி.என்.பி குடும்பத்தார் செய்திருந்தனர்.

# சென்னை மணலியில் லாரி ஓட்டுநர் மர்மமான முறையில் உயிரிழப்பு

சென்னை, நவ,20

சென்னை மணலி அம்பேத்கர் நகர் பகுதியை சேர்ந்த லாரி ஓட்டுநர் ஆறுமுகம் இவர் நேற்று அதிகாலை மணலி பகுதியில் தலையில் பலத்த காயங்களுடன் ரத்த வெள்ளத்தில் விழுந்து இறந்து கிடந்துள்ளார்.

இதனை பார்த்த அக்கம் பக்கத்தினர் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர் சம்பவ இடத்திற்கு வந்த மணலி போலீசார் ஆறுமுகத்தின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக



அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

விசாரணையில் திருமணமாகி மூன்று ஆண்டுகளான நிலையில் மனைவியுடன் தனியாக வசித்து வரும் ஆறுமுகம் லாரி ஓட்டுனராக பணிபுரிந்து வருவதாகவும் இந்நிலையில் நேற்று அதிகாலை மணலி பகுதியில் தலையில் பலத்த காயத்துடன் ரத்த வெள்ளத்தில் உயிரிழந்து இருப்பதால் கொலையா அல்லது வேறு ஏதேனும் காரணமா என்று குறித்து மணலி போலீசார் விசாரணை ஈடுபட்டு வருகின்றனர்.

39 வயதான லாரி ஓட்டுநர் ஆறுமுகம் மர்மமான முறையில் உயிரிழந்த சம்பவத்தால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்படுத்தி உள்ளது

# நேற்று இரும்பு பெண்மணி இந்திரா காந்தியின் பிறந்த தினம்

**இந்தியாவின் தவிர்க்க இயலாத சகாப்தம்**

புதுடில்லி, நவ. 20–

இந்தியாவின் முதல் மற்றும் ஒரே பெண் பிரதமராகநாளதுவரையில் நினைவுகூரப்படும்,இரும்பு பெண்மணி இந்தியா காந்தியின் பிறந்த தினம் நேற்று.

உலகளவில் பெண்களின் ஆதர்சங்களில் ஒருவராகநீடிப்பவர்இந்திரா காந்தி. ஏற்றமும் இறக்கமும் நிறைந்ததனிப்பட்ட மற்றும் அரசியல் வாழ்க்கையின் போராட்டங்களை, இறுதியாக தனது நெஞ்சில் வாங்கிய துப்பாக்கி குண்டுகளுக்கு இணையான தீரத்துடன் எதிர்கொண்டவர். இரும்பு பெண்மணி என்ற அடையாளத்துக்கு இலக்கணமானவர்.

சுதந்திர போராட்ட வீரர் மோதிலால் நேருவின் பேத்தி, சுதந்திர இந்தியாவின் முதல்பிரதமர் ஜவஹர்லால் நேருவின் ஒரே மகள் என பெரும் பின்னணியுடன்அரசியலில் முன்னிறுத்தப்பட்டாலும், இந்திரா கடந்து வந்த பாதைகள் கரடுமுரடானவை.

தாகூரின்சாந்திநிகேதன் பள்ளியிலும்,ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்திலும் படிப்பை முடித்த இந்திரா, தேசத்தின் விடுதலைக்கு முன்பாகவே காங்கிரஸ் கட்சியில் இணைந்தவர். தாயின் அரவணைப்பு அவசியமாகும் வயதில் அவரை இழந்த இந்திரா பிரியதர்ஷினி, தந்தையின் அரசியல் புறப்பாட்டில் அவருக்கு துணையாக நின்றார். அங்கிருந்தே இந்திரா காந்தியாக அவருக்கான அரசியல் பாலபாடமும் தொடங்கியது. நேரு மறைவுக்குப் பின்னரான லால்பகதூர் சாஸ்திரி ஆட்சிக் காலத்தில் தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறை அமைச்சரானார்.

சாஸ்திரியின் மறைவுக்குப் பின்னர் கட்சி, ஆட்சி இரண்டுக்கும் பொறுப்பானார். 1966 முதல் 1977 வரை தொடர்ந்து மும்முறை பிரதமராக ஆட்சி செய்தார். பின்னர் 1980ல் மீண்டும்பதவியேற்று 1984–ல் தனது பிரத்யேக பாதுகாவலர்களால் கொல்லப்படும் வரை நான்காவது முறை



பிரதமராக நீடித்தார்.

இரும்பு பெண்மணி என்பதற்குஅடையாளமாக, தனது தந்தையின் வழியில் நின்று புதிய இந்தியாவை கட்டமைப்பதற்கான வளர்ச்சித் திட்டங்களை கொண்டு வந்தார். கிழக்கு பாகிஸ்தானின் கோரிக்கைக்காக இந்திய ராணுவத்தை ஏவி, பங்களாதேஷ் உருவாக வழிசெய்தார். சகலத்திலும் துணையாக நின்ற மகன் சஞ்செய் காந்தியை விமான விபத்தில் இழந்த தருணம் தவிர்த்து, இரும்பு பெண்மணி தனது வாழ்நாளில் எதற்கும் கலங்கியதில்லை.

அலகாபாத் நீதிமன்ற தீர்ப்பினால்தனதுஅரசியல் வாழ்க்கை முடிவுக்கு வந்துவிடுமோ என்ற அவசரத்தில், தேசத்தில் எமெர்ஜென்சியை கொண்டு வந்தார். அவரது அரசியல் வாழ்க்கையில் அழியாத கறையான அந்த அடையாளத்தையும் துடைத்தெறிந்து, பிற்பாடு மக்கள்ஆதரவோடுமீண்டும் ஆட்சியை பிடித்தார்.

தேசத்தின் பிரிவினைவாதிகளை இரும்பு கரம் கொண்டு அடக்கினார். பொற்கோவிலில் மறைந்திருந்த காலிஸ்தான் தீவிரவாதிகளை வேட்டையாட புளூஸ்டார் நடவடிக்கையின் பெயரில் ராணுவத்தை ஏவியதில், நூற்றுக்கணக்கான சீக்கியர்கள் பலியானார்கள். இதன் பக்க விளைவாக தனது சீக்கிய பாதுகாவலர்களால் இறுதியில் இந்திரா சுட்டுக்கொல்லப்பட்டார்.

இன்றைக்கும் அரசியலுக்கு அப்பால் ஒரு தீரமிக்க பெண் ஆளுமையாக அவர் கொண்டாடப்பட்டு வருகிறார். அரசியல் பாதையின் சில சறுக்கல்களை தவிர்த்துவிட்டால் இரும்பு பெண்மணி இந்திரா காந்தி இந்தியாவின் சகாப்தமாகவே நீடிப்பார்.

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை 2 மகள்கள் ரயில் மோதி பலி: பொதுமக்கள் சாலை மறியல்

திருவள்ளூர், நவ.20–

வேப்பம்பட்டு அருகே உள்ள பெருமாள்பட்டு பகுதியை சேர்ந்தவர் மனோகரன் (வயது48). இவரது மகள்கள் தர்ஷினி (வயது18), தாரணி (12). மனோகரனின் மனைவி உடல்நிலை பாதிக்கப்பட்டு வில்லிவாக்கத்தில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு உள்ளார். அவரை பார்ப்பதற்காக நேற்று காலை மனோகரன் தன் மகள்களுடன் வேம்பம்பட்டு ரெயில் நிலையம் வந்தார்.



காலை 11.30 மணி அளவில் அவர்கள் தண்டவாளத்தை கடந்து செல்ல முயன்றனர். அப்போது சென்னையில் இருந்து அரக்கோணம் நோக்கி சென்ற மின்சார ரெயில் அவர்கள் மீது மோதியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை உட்பட இரண்டு மகள்கள் ரயில் மோதி பலியானார்கள்.

இதுகுறித்து தகவல் அறிந்த வேப்பம்பட்டு, பெருமாள்பட்டு மற்றும் சுற்றுப்புற பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் திரண்டு சென்று கடந்த 10 ஆண்டுக்கு மேல் ரயில்வே மேம்பாலம் பணி நடைபெற்று வருகிறது. இதனால் இந்த வேப்பம்பட்டு ரயில் நிலையத்தில் 100 க்கும் மேற்பட்டோர் ரயில் மோதி பலியாகியுள்ளனர். எனவே இந்த ரயில்வே மேம்பாலத்தை விரைந்து கட்டி முடிக்க வலியுறுத்தி திருவள்ளூர் – ஆவடி நெடுஞ்சாலையில் வேப்பம்பட்டு மற்றும் சுற்றுப்புற பகுதியைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்டோர் சாலையில் அமர்ந்து சாலை மறியலில் ஈடுபட்டனர்.

இது குறித்து தகவல் அறிந்த திருவள்ளூர் வட்டாட்சியர் சுரேஷ் குமார், செவ்வாப்பேட்டை போலீஸ் இன்ஸ்பெக்டர் பாஸ்கரன் மற்றும் போலீசார் விரைந்து வந்து மறியலில் ஈடுபட்டவர்களுடன் பேச்சுவார்த்தைநடத்தினர் .பின்னர் அவர்கள் கலைந்து சென்றதாககூறப்படுகிறது. பின்னர் தகவல் அறிந்ததும் திருவள்ளூர் ரெயில்வே போலீசார் விரைந்து வந்து பலியான 3 பேரின் உடல்களையும் மீட்டு பிரேதபரிசோதனைக்காக திருவள்ளூர் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்

# ஸ்ரீ ராம் கல்வி அறக்கட்டளை சார்பில் நடைபெற்ற பாக்ஸ் கிரிக்கெட் போட்டி

திருவள்ளூர், நவ. 20 –

ஸ்ரீ ராம் கல்வி அறக்கட்டளை சார்பில், திருவள்ளூர் பெருமாள்பட்டு ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில் பொறியியல் மாணவர்களுக்கு இடையிலான பாக்ஸ் கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. 6 ஓவர்கள் கொண்ட இப்போட்டியானது நாக் அவுட் முறையில் நடந்தது.



இரு தினங்கள் (நவம்பர் 17, 18) நடைபெற்ற போட்டியினை கல்லூரி முதல்வர் சி.பி. கார்த்திகேயன் மற்றும் கல்லூரிநிர்வாகஇயக்குநர் பாலசுப்ரமணியன் தொடங்கி வைத்தனர்.

போட்டிக்கான ஏற்பாட்டினை மெக்கானிக்கல் இன்ஜினியரிங் பேராசிரியர் டி.நந்தகுமார், மெக்கானிக்கல் இன்ஜினியரிங் மாணவர்கள் ராகேஷ், யாமினி, கார்த்திக், வாசன் மற்றும் பல மாணவர்கள் ஒன்றிணைந்து சிறப்பாக செய்திருந்தனர்.

இதில் 16 கிரிக்கெட் அணிகள் கலந்து கொண்டனர். 14 அணிகள் நாக் அவுட் முறையில் வெளியேறினர். இறுதி போட்டியில் டோமன் அணியும் மெக் பாய்ஸ் அணியும் மோதின. முதலில் பேட் செய்த டோமன் அணி 39 ரன்கள் எடுத்தனர். அடுத்ததாக பேட் செய்த மெக் பாய்ஸ் அணி 18 ரன்கள் மட்டுமே எடுத்து அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

இதில் முதல் பரிசை டோமன் அணி 8 புள்ளிகள் எடுத்து தட்டி சென்றது. இரண்டாம் பரிசை மெக் பாய்ஸ் அணி 6 புள்ளிகள் எடுத்து வென்றது. மூன்றாம் பரிசை லியோ பாய்ஸ் அணி 4 புள்ளிகள் பெற்று வென்றது.

ஆட்ட நாயகனாக முதலாமாண்டு மாணவர் விக்ரம் தேர்வு செய்யப்பட்டார். போட்டியில் வென்ற அனைவருக்கும் இயந்திரவியல் துறை பேராசிரியை ஜி.சுகன்யா மற்றும் பேராசிரியர் ஜி.முத்துகுமார் பரிசுகளை வழங்கினர். ஒட்டுமொத்த போட்டிக்கான ஏற்பாடுகளையும் ஸ்கூல் ஆஃப் மெக்கானிக்கல் இன்ஜினியரிங் (SoME) சிறப்பாக செய்திருந்தனர். உடற்கல்வி ஆசிரியர் பாண்டியராஜன் போட்டியினைமுன்னின்று நடத்தினார்.



கரூர் மாவட்டம் கடவூர் ஊராட்சி ஒன்றியம் மேலப்பகுதி ஊராட்சிக்கு உட்பட்ட வீரணம்பட்டி பகுதியில் செய்தி மக்கள் தொடர்புதுறையின் சார்பில் தமிழக அரசின் சாதனை விளக்கப் புகைப்படக் கண்காட்சி நடைபெற்ற போது பொது மக்கள் பார்வையிட்டனர்.

# வைத்தீஸ்வரன் கோவிலில் நடைபெற்ற சூரசம்ஹார நிகழ்வில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு செல்வ முத்துக்குமாரசாமியை தரிசனம் செய்தனர்

சீர்காழி,நவ,20

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே வைத்தீஸ்வரன் கோவிலில் தையல் நாயகி சமேத வைத்தியநாத சுவாமி கோவில் அமைந்துள்ளது. தேவார பாடல் பெற்ற இக்கோவில் நவகிரகங்களில் செவ்வாய் ஸ்தலமாக திகழ்ந்து வருகிறது.



அறுபடை வீடுகளுக்கு இணையாக போற்றப்படும் இந்த கோவிலில் முருகபெருமான், அழகன் செல்வமுத்துக்குமார சுவாமியாக எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பாலித்து வருகிறார்.

இத்தகைய சிறப்புமிக்க கோவிலில் செல்வ முத்துக்குமாரசுவாமி சிவபெருமானிடம் வேல் வாங்கும் நிகழ்ச்சியும், அதனை தொடர்ந்து அசுரன் சூரபத்மனை வதம் செய்யும் சூரசம்கார நிகழ்வும் நடைபெற்றது. முடிவில் மங்கள வாத்தியம் இசைக்க, சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் ஓத, செல்வ முத்துக்குமாரசாமிக்கு மகா தீபாராதனை நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

# அரியலூரில் திமுக மாவட்ட செயற்குழு கூட்டம்



அரியலூர்,நவ.20-

அரியலூரில் திமுக மாவட்ட செயற்குழு கூட்டம் நடைபெற்றது.

அரியலூர் மாவட்ட திமுகசெயற்குழு கூட்டம், கட்சியின் சட்டத்திட்ட திருத்தகுழு இணைச் செயலாளர் சுபா. சந்திரசேகர் தலைமையில் நடைபெற்றது.

சேலத்தில் டிசம்பர் 17ஆம் தேதி நடைபெறும் திமுகமாநிலஇளைஞரணி 2 - வது மாநில மாநாட்டில், திமுகவினர் பெருந்திரளாக கலந்துகொள்வது குறித்தும், இல்லம் தேடி இளைஞரணி உறுப்பினர்கள் சேர்க்கை குறித்தும், கட்சியின் அரியலூர் மாவட்டச் செயலாளரும், போக்குவரத்துத்துறை அமைச்சருமான சா.சி. சிவசங்கர், இளைஞரணி மண்டலபொறுப்பாளரும், மாநில இளைஞரணி துணை செயலாளர் ஆனந்தகுமார் ஆகியோர் ஆலோசனைகள் வழங்கி பேசினர்.

இந்நிகழ்வில் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், திமுக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் ச.அ.பெருநற்கிள்ளி, தலைமை செயற்குழு உறுப்பினர் எம். பி.பாலசுப்ரமணியன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தெய்வ. இளையராஜன் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள்,அனைத்து மாவட்ட அணி அமைப்பாளர்கள் கலந்துகொண்டனர்.



தென்காசி தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் சேலம் இளைஞர் அணி மாநாடு பிரச்சார இருசக்கர வாகன பேரணி குழுவினர் நேற்று குற்றாலத்தில் இருந்து நீட் விலக்கு நம் இலக்கு என்ற விழிப்புணர்வு பிரச்சார குழுவினர் பேரணியாக கடையநல்லூர் மணிக்கூண்டு அருகே வந்தடைந்தனர், அவர்களுக்கு திமுக நகர கழகம் சார்பில் முன்னாள் மாவட்ச் செயலாளரும், தலைமை செயற்குழு உறுப்பினருமான மா. செல்லத்துரை, நகரக் கழகச் செயலாளர் எஸ். அப்பாஸ் தலைமையில் ஆயிரக்கணக்கான திமுக தொண்டர்கள் நிர்வாகிகள் மாவட்டக் கழக, நகர, பேரூர் கழக வார்டு கழக, சார்பு அணி நிர்வாகிகள் நகர்மன்ற உறுப்பினர்கள் வரவேற்று பழ ஜூஸ், பிஸ்கட் வழங்கி சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. மேலும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்த பேரணி வெற்றி பெற வேண்டி கழக நிர்வாகிகளுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

# ராஜஸ்தான் : நின்று கொண்டிருந்த லாரி மீது போலீஸ் வாகனம் மோதி விபத்து

## 5 காவலர்கள் பலி, இருவர் காயம்



ஜெய்ப்பூர் : நவ. 20, ராஜஸ்தான் மாநிலம், சுரு மாவட்டத்தில் நேற்று அதிகாலையில் நின்று கொண்டிருந்த லாரி மீது போலீஸ் வாகனம் மோதி ஏற்பட்ட விபத்தில் 5 போலீஸார் உயிரிழந்தனர், 2 பேர் காயமடைந்துள்ளனர்.

விபத்து குறித்து சுரு மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் பிரவீன் நாயக் கூறுகையில், "இந்த விபத்து சுஜாங்கர் சதார் காவல்நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதியில் நடந்துள்ளது. விபத்தில் சிக்கிய போலீஸார் தேர்தல் கூட்டத்துக்கான பாதுகாப்பு பணிக்காக சென்றுகொண்டிருந்தனர். விபத்தில் இறந்தவர்கள், கின்வாஸ்ரா காவல் நிலையத்தைச் சேர்ந்த ஏஎஸ்ஐ ராமச்சந்திரா, காவலர்கள் கும்பாராம், சுரேஷ் மீனா, தனராம், மகேந்திரா என அடையாளம் காணப்பட்டுள்ளது" என்றார்.

இதனிடையே, விபத்தில் இறந்த காவலர்களுக்கு மாநில முதல்வர் அசோக் கெலாட் தனது இரங்கலை தெரிவித்துள்ளார். தனது எக்ஸ் பக்கத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், "நேற்று அதிகாலை, சுரு மாவட்டம், சுஜாங்கர் சதார் பகுதியில் நடந்த விபத்தில் 5 காவலர்கள் இறந்த சோகமான செய்தி கிடைத்தது. விபத்தில் இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன். விபத்தில் காயமடைந்தவர்கள் விரைவாக குணமடைய வேண்டுகிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

# நெற்கதிரை சுமந்தபடி கும்மனூர் தென்பெண்ணை ஆற்று நீரை கடக்கும் தொழிலாளர்கள்

## பாலம் கட்டப்படுமா?



கிருஷ்ணகிரி : நவ. 20-

கிருஷ்ணகிரி அருகே கும்மனூர் கிராமத்தில் அறுவடையான நெற்கதிரின் கட்டை தலையில் சுமந்தபடி தென்பெண்ணை ஆற்று நீரை விவசாயத் தொழிலாளர்கள் கடந்து செல்லும் நிலையுள்ளது. இச்சிரமத்தைப் போக்க ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட வேண்டும் எனக் கோரிக்கை எழுந்துள்ளது.

கிருஷ்ணகிரி அருகே திப்பனப்பள்ளி ஊராட்சிக்கு உட்பட்டது கும்மனூர் கிராமம். இக்கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகளின் விளைநிலங்கள் தென்பெண்ணை ஆற்றின் மறுகரையை யொட்டியுள்ளது. இங்கு சுமார் ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் விவசாயிகள் ஆண்டுதோறும் இரு போகம் நெல் சாகுபடியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், ஆற்றின் குறுக்கே பாலம் இல்லாததால், விவசாய பணிகளை மேற்கொள்ள கும்மனூர் விவசாயிகள் ஆற்று நீரில் இறங்கி மறு கரைக்குச் செல்லும் நிலை உள்ளது.

குறிப்பாக, ஆற்றில் நீர் பெருக்கெடுத்துச் செல்லும் போது, ஆற்று நீரில் இறங்கி தங்கள் நிலத்துக்குச் செல்வதோடு, உரம் உள்ளிட்ட விவசாய இடுபொருட்களைத் தலைச் சுமையாக சுமந்தபடி ஆபத்தான முறையில் ஆற்று நீரைக் கடப்பது பல ஆண்டுகளாகத் தொடர்ந்து வருகிறது. மேலும், ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் காலங்களில் சுமார் 20 கிமீ தூரம் சுற்றியே விளை நிலத்துக்கு சென்று வர வேண்டிய கட்டாய நிலை ஏற்படுகிறது என விவசாயிகள் வேதனை தெரிவித்தனர். இச்சிரமத்தைப் போக்க தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக கும்மனூர் கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் சிலர் கூறியதாவது: கும்மனூரில் இருந்து 1 கிமீ தொலைவில் உள்ள தென் பெண்ணை ஆற்றைக் கடந்தே எங்களது விளை நிலத்துக்கு செல்ல முடியும். ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்படும் காலங்களில் கும்மனூரில் இருந்து மாதேப்பட்டி, செம்படமுத்தூர் உள்ளிட்ட 10-க்கும் மேற்பட்ட கிராமங்கள் வழியாகச் சென்றே விளை நிலத்தை அடைய முடியும்.

நெல் நடவு, பராமரிப்பு பணி என அறுவடை வரை நாங்கள் 10 அடி ஆழமுள்ள ஆற்றில் இறங்கி நீரை ஆபத்தான முறையில் கடந்தே விளை நிலத்துக்குச் செல்கிறோம். குறிப்பாக, அறுவடைக் காலங்களில் நெற்கதிரைத் தலையில் சுமந்தபடி ஆற்றில் நீரில் மறு கரைக்கு செல்லும் நிலையுள்ளது. கரையில் இருந்து கதிர் கட்டுகளை டிராக்டரில் ஏற்றி களத்துக்குக் கொண்டு சென்று கதிர் அடிக்கிறோம்.

இதனால், எங்களுக்கு அறுவடை கூலி உள்ளிட்ட செலவினங்கள் அதிகரிக்கிறது. இதனால், பலர் வேளாண் தொழிலைக் கைவிடும் நிலையுள்ளது. விவசாயிகளின் நலன் கருதி தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் கூறினர்.

# சென்னையில் இன்று வி.சி.க., உயர்நிலை குழு கூட்டம்



சென்னை, நவ. 20-

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் உயர்நிலைக் குழு கூட்டம், சென்னையில் இன்று நடைபெற உள்ளது.

இது தொடர்பாக கட்சித் தலைமையகம் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் உயர் நிலைக் குழு கூட்டம், கட்சித் தலைவர் திருமாவளவன் தலைமையில் இன்று காலை 10 மணிக்கு சென்னை அசோக் நகரில் உள்ள விசிக தலைமையகத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் பொதுச் செயலாளர்கள், முதன்மைச் செயலாளர்கள், செய்தித் தொடர்பாளர், தலைமை நிலையச் செயலாளர்கள், துணைப் பொதுச் செயலாளர்கள், அமைப்புச் செயலாளர்கள், கருத்தியல் பரப்புச் செயலாளர் உள்ளிட்டோர் பங்கேற்பர்.

# கிறிஸ்துவ இந்திய வாரிசுரிமை சட்டப்படி திருமணமான மகனின் சொத்தில் தாய்க்கு பங்கு இல்லை : சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு




சென்னை : நவ. 20, கிறிஸ்துவ இந்திய வாரிசுரிமை சட்டப்படி, திருமணமான மகனின் சொத்தில் தாய்க்கு பங்கு இல்லை என சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நாகப்பட்டினத்தை சேர்ந்த பவுலின் இருதய மேரியின் மகன் மோசஸ். இவரை கற்பக தேவி என்ற அக்னஸ் கிறிஸ்துவ மதத்துக்கு மாறி கடந்த 2004-ம் ஆண்டு திருமணம் செய்துள்ளார். இந்த தம்பதிக்கு ஒரு பெண் குழந்தை உள்ளது. கடந்த 2012-ல் மோசஸ் இறந்துவிட்ட நிலையில், மோசஸின் சொத்தில் பங்கு கேட்டு அவரது தாயார் பவுலின் இருதய மேரி, நாகப்பட்டினம் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். அந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம், மோசஸின் சொத்தில் அவரது தாயாருக்கும் பங்கு உள்ளது என தீர்ப்பளித்தது.

இதை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் அக்னஸ் மேல்முறையீடு செய்தார். இந்த வழக்கு நீதிபதிகள் ஆர்.சுப்பிரமணியன், என்.செந்தில் குமார் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் சி.முனுசாமி ஆஜராகி, "இந்தியாவில் பின்பற்றப்படும் கிறிஸ்துவ வாரிசுரிமை சட்டத்தின் பிரிவு 33 மற்றும் 33-ஏ பிரகாரம் திருமணமான மகன் இறந்து விட்டால் அந்த சொத்தில் மனைவி, குழந்தைகளுக்கு மட்டுமே பங்கு தரப்பட்டுள்ளது. தாயாருக்கு அந்த சொத்தில் எந்த உரிமையும் கிடையாது. ஆனால், இதை கீழமை நீதிமன்றம் கருத்தில் கொள்ளாமல் உத்தரவு பிறப்பித்துள்ளது'' என வாதிட்டார்.

பவுலின் இருதய மேரி சார்பில் நீதிமன்றமே வழக்கறிஞர் பி.எஸ். மித்ரா நேஷாவை நியமித்து வாதிட உத்தரவிட்டது. அவர் வாதிடும் போது, ''கிறிஸ்துவ இந்திய வாரிசுரிமை சட்டத்தின் பிரிவு 42 பிரகாரம் கணவர் இறந்துவிட்டால் அவரது விதவை மனைவி, குழந்தைகளுக்கு மட்டுமே சொத்தில் பங்கு உள்ளது. மனைவியோ, குழந்தைகளோ இல்லை என்றால் மட்டுமே மகன் பெயரில் உள்ள சொத்துக்கு தாயாரும், உடன் பிறந்த சகோதர, சகோதரிகளும் உரிமை கோர முடியும்'' என தெரிவித்தார்.

அதையடுத்து நீதிபதிகள், கிறிஸ்துவ இந்திய வாரிசுரிமை சட்டத்தின் படி திருமணமான மகனின் சொத்தில் தாயார் உரிமை கோர முடியாது என ஏற்கெனவே 2021-ல் சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. அதை விசாரணை நீதிமன்றம் கவனத்தில் கொள்ளத் தவறிவிட்டது என கூறி நாகப்பட்டினம் மாவட்ட நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பை ரத்து செய்து உத்தரவிட்டுள்ளனர். மேலும், இந்த வழக்கில் நீதிமன்றத்துக்கு உதவிய வழக்கறிஞர் மித்ரா நேஷாவுக்கும் நீதிபதிகள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

## உத்தராகண்ட் சுரங்க விபத்து

# தொழிலாளர்கள் இன்னும் நான்கு, ஐந்து நாட்களில் மீட்கப்படலாம் – அதிகாரிகள் தகவல்



டேராடூன் : நவ. 20, உத்தராகண்டின் சில்க்யாரா சுரங்கப் பாதையில் சிக்கியுள்ள 41 தொழிலாளர்கள் மீட்கும் பணிகள் நேற்று 8-வது நாளை எட்டியுள்ளது. இதனிடையே நான்கு வெவ்வேறு வழிகளில் மீட்பு பணிகளை மேற்கொள்ள பிரதமர் அலுவலகம் முடிவு செய்துள்ளது.

உத்தராகண்டில் சார்தாம் நெடுஞ்சாலை திட்டத்தின் ஒரு பகுதியாக உத்தரகாசி, யமுனோத்ரியை இணைக்கும் வகையில் சில்க்யாரா வளைவு - பர்காட் இடையே 4.5 கி.மீ. தொலைவுக்கு சுரங்கப்பாதை அமைக்கப்பட்டு வருகிறது. இதில் கடந்த 12-ம் தேதி அதிகாலை 4 மணி அளவில் 60 மீட்டர் தொலைவு சுரங்கப் பாதையில் மண் சரிந்தது. இருபுறமும் மணல் மூடிய நிலையில் சுரங்கப் பாதைக்குள் 40 தொழிலாளர்கள் சிக்கி உள்ளனர். சுமார் ஒருவார காலமாக சுரங்கத்துக்குள் தொழிலாளர்கள் சிக்கியுள்ளதால் அவர்களின் உடல் மற்றும் மனநிலை குறித்த அச்சம் அதிகரித்துள்ளது.

இதனிடையே, உத்தராகண்ட் சென்ற மத்திய நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் நிதின் கட்கரி மீட்பு பணி நடவடிக்கைகளை ஆய்வு செய்தார். அதுகுறித்து நிதின் கட்கரி கூறுகையில், "ஆர்ஜர் இந்திரம் சரியாக செயல்பட்டால் சுரங்கத்துக்குள் சிக்கியிருக்கும் தொழிலாளர்கள் இன்னும் 2-3 நாட்களில் மீட்கப்படுவார்கள். உள்ளே இருக்கும் தொழிலாளர்கள் உயிருடனும், ஆரோக்கியத்துடனும் இருப்பதை உறுதி செய்வதில் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

சிறப்பு இயந்திரங்களைக் கொண்டு வருவதற்காக பிஆர்ஓ மூலமாக புதிய சாலைகள் போடப்படுகின்றன. பல்வேறு இயந்திரங்கள் இங்கு வந்துள்ளன. தற்போது இரண்டு ஆர்ஜர் இயந்திரங்கள் துளையிடும் பணிகளைச் செய்து வருகின்றது"என்று தெரிவித்தார்.

முன்னதாக, பிரதமர் அலுவலக முன்னாள் ஆலோசகர் பாஸ்கர் குல்பே, "இங்கு வேலை செய்யும் பல்வேறு நிறுவனங்களின் கூட்டு முயற்சியால் உள்ளே சிக்கியிருக்கும் தொழிலாளர்கள் இன்னும் நான்கு ஐந்து நாட்களில் மீட்கப்படலாம். கடவுளின் கருணை இருந்தால் அது இன்னும் சீக்கிரமாக முடியும்" என்று தெரிவித்திருந்தார்.

இதனிடையே உள்ளே இருக்கும் தொழிலாளர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் அவசர வெளியேற்ற வழி அமைக்கப்பட்டுவருகிறது. சுரங்கத்தின் வாசலில் பாதுகாப்பு பகுதிகளை ஏற்படுத்துவதும் இதில் அடங்கும். சில்க்யாரா சுரங்கப்பாதைக்கான புதிய பாதையை நேற்றுக்குள் பிஆர்ஓ அமைத்துமுடிக்கும்என்று மீட்பு குழு அதிகாரிகள் நம்புகின்றனர். இது சிக்கி இருக்கும் தொழிலாளர்களை மீட்க வேறு வழியை வழங்கும், மேலும் வெள்ளிக்கிழமை நிறுத்தப்பட்ட பணிகளை மீண்டும் தொடங்க வழி செய்யும்.

சர்வதேச சுரங்க நிபுணரான பேராசிரியர் அர்னோல்ட் டிக்ஸ் சுரங்கத்துக்குள் சிக்கியிருக்கும் தொழிலாளர்களை மீட்கும் பணிகளில் உதவுவதற்காக இந்தியா வருவதாக வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

இந்த நிலையில் சுரங்கத்துக்குள் சிக்கியிருக்கும் 41 தொழிலாளர்களை மீட்பதற்கு ஒரே வழிமுறையில் மட்டும் செயல்படுவதற்கு பதிலாக நான்கு வெவ்வேறு வழிமுறைகளில் செயல்படலாம் என்று பிரதமர் அலுவலக அதிகாரிகளும், களத்தில் உள்ள மீட்புக்குழுவினரும் முடிவு செய்துள்ளனர்.

# சமவெளிப் பகுதிகளை காட்டிலும் நீலகிரியில் பால் உள்ளிட்ட ஆவின் பொருட்களுக்கு கூடுதல் விலை



உதகை:நவ.20,சமவெளிப் பகுதிகளை காட்டிலும் நீலகிரி மாவட்டத்தில் பால் உள்ளிட்ட ஆவின் பொருட்கள் கூடுதல் விலைக்கு விற்கப்படுவது குறித்து அமைச்சரிடம் முறையிட்டும் தீர்வு கிடைக்காததால் பொதுமக்கள் அதிருப்திக் குள்ளாகியுள்ளனர்.

நீலகிரி மாவட்டத்துக்கு அரிசி முதல் காய்கறி வரை, சிமென்ட் முதல் செங்கல் வரை அனைத்து பொருட்களும் சமவெளிப் பகுதிகளிலிருந்து தான் கொண்டுவரப்படுகின்றன. இதனால், அப்பொருட்களின் விலை நீலகிரி மாவட்டத்தில் கூடுதலாகவே விற்பனை செய்யப் படுகின்றன. இந்நிலையில், இதில் அத்தியாவசிய பொருளான பாலும் இணைந்திருக்கிறது. பொருளாதார ரீதியாக பின்தங்கியுள்ள நீலகிரி மாவட்டத்தில், அனைத்து பொருட்களையும் கிடைக்கும் குறைந்த வருவாயில் வாங்கி வரும் மக்கள், தற்போது பாலுக்கும் கூடுதல் விலை கொடுக்க வேணடிய அவலத்துக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் விவசாயத்துடன் இணைந்து உப தொழிலாக பால் உற்பத்தி சிறப்பாக விளங்கி வருகிறது. எனவே, பால் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலை, நுகர்வோருக்கு குறைந்த விலையில் தரமான பால் என்ற அடிப்படையில் பால் பொருட்கள் விற்பனையில், தமிழ்நாட்டில் ஆவின் நிறுவனம் 40 ஆண்டுகளாக இயங்கி வருகிறது.

மலை மாவட்டமான நீலகிரியில் விவசாயம்தான் பிரதான தொழில். விவசாயத்தை சார்ந்த கால்நடை வளர்ப்பில் பழங்குடியினர் ஈடுபடுகின்றனர். மேய்ச்சல் நிலங்கள் சுருங்கியதால் கால்நடை வளர்ப்பு பின்தங்கியுள்ளது. இதனால், மாவட்டத்தில் பால் உற்பத்தியும் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. பால் தேவையை பூர்த்தி செய்ய கோவை, ஈரோடு மாவட்டங்களிலிருந்து ஆவின் நிறுவனம் பால் கொள்முதல் செய்கிறது. இந்நிலையில், நீலகிரி மாவட்டத்தில் ஆவின் நிறுவனம் மூலமாக நுகர்வோருக்கு விற்கப்படும் பால் மற்றும் பால் பொருட்களின் விலை, தமிழ்நாட்டின் பிற மாவட்டங்களைவிட கூடுதலாக உள்ளது, நுகர்வோருக்கு அதிர்ச்சியை அளிக்கிறது.

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் ரூ.35-க்கு விற்கப்படும் ½ லிட்டர் தயிர், 30 கிலோமீட்டர் தொலைவில் உள்ள நீலகிரி மாவட்டத்தில் ரூ.40-க்கு மேல் விற்கப்படுகிறது. தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் ரூ.22.50-க்கு விற்கப்படும் பால், நீலகிரி மாவட்டத்தில் மட்டும் ரூ.27-க்கு விற்பனை செய்யப்படுகிறது. பால் அத்தியாவசியப் பொருள் என்பதால், மக்கள் மீது கூடுதல் சுமை ஏற்றப்படுகிறது.

ஆவின் நிறுவனத்தை ஆய்வு செய்ய வந்த பால்வளத் துறை அமைச்சர் மனோ தங்கராஜிடம், நீலகிரி மாவட்டத்தில் பால் மற்றும் பால் பொருட்கள் கூடுதல் விலைக்கு விற்கப்படுவதாக மக்கள் புகார் தெரிவித்தனர். இதை ஆச்சரியமாக கேட்ட அவர், அனைத்து மாவட்டங்களிலும் ஒரே விலையில்தான் விற்பனையாகிறது. இதை முறைப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்து சென்றார். ஆனால், அதற்கு பின்னரும் விலை குறைக்கப்படவில்லை. அமைச்சரிடமே முறையிட்ட பின்னர், இனி யாரிடம் முறையிடுவது என தெரியவில்லை என மக்கள் புலம்பும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

மலை மாவட்ட நுகர்வோர் பாதிப்புக்குள்ளாகி வருவதால், பால் விலையை குறைக்க ஆவின் நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், நீலகிரி நுகர்வோர் சங்கத்தினர் வலியுறுத்தியுள்ளனர்.

இது குறித்து குன்னூர் நுகர்வோர் பாதுகாப்பு சங்க தலைவர் சு.மனோகரன் கூறும்போது, "நீலகிரி மாவட்டத்தில் ஆவின் பொருட்கள் கூடுதல் விலைக்கு விற்பனை செய்யப்படுவது தொடர்பாக, ஆவின் நிறுவன பொது மேலாளரை தொடர்பு கொண்டு முறையிட்டோம். நீலகிரியில் உற்பத்தி செலவு அதிகமாக இருப்பதாலும், பிற மாவட்டங்களில் இருந்து கொண்டுவரப்படும் பால் பொருட்களுக்கு போக்குவரத்து செலவு அதிகம் என்றும், அதனால் நீலகிரி மாவட்டத்தில் மட்டும் கூடுதல் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றும் கூறுகிறார். இதுதொடர்பாக அரசாணை எதுவும் இல்லை.

தமிழ்நாடு முழுவதும் அரசு நிர்ணயித்துள்ள விலையில் விற்கப்படும் நிலையில், நீலகிரி மாவட்டத்தில் மட்டும் அதற்கு கூடுதல் செலவாகிறது என்ற வாதம் ஏற்கத்தக்கதல்ல. பொருளாதார ரீதியில் பின் தங்கியுள்ள நீலகிரி வாழ் மக்களை ஆவின் நிறுவனம் சுரண்டுகிறது. இது நுகர்வோருக்கு இழைக்கப்படும் அநீதி.

எனவே, நீலகிரி மாவட்டத்தில் பால் உள்ளிட்ட ஆவின் பொருட்கள், தமிழ்நாட்டில் பிற மாவட்டங்களுக்கு இணையான விலையில் விற்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தி முதல்வர், அமைச்சர்கள் உட்பட பலருக்கு மனு அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இது குறித்து வழக்கு தொடர முடிவு செய்துள்ளோம்" என்றார்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

**வரலாறு உலகம்**

# காசா மருத்துவமனையில் 32 கைக்குழந்தைகள் உள்பட 291 நோயாளிகள் உயிருக்குப் போராட்டம்

## ஐ.நா. குழு அதிர்ச்சித் தகவல்



**காசாநகர் : நவ. 20,**

**காசாவின் அல் ஷிபா மருத்துவமனையில் 32 கைக்குழந்தைகள் உள்பட 291 நோயாளிகள் தவித்து வருகின்றனர். இதனை மருத்துவமனையை ஆய்வு செய்த உலக சுகாதார அமைப்பின் தலைமையிலான ஐ.நா. குழு உறுதி செய்துள்ளது.**

இஸ்ரேல் - ஹமாஸ் போர் நாளுக்குநாள் தீவிரமடைந்துவரும் சூழலில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இஸ்ரேல் ராணுவம் காசாவின் அல் ஷிபா மருத்துவமனையை காலி செய்ய உத்தரவிட்டது. அந்த மருத்துவமனையில் இருந்து 2500 பேர் வெளியேற்றப்பட்டனர்.

பொதுமக்கள், மருத்துவர்கள், நகரக்கூடிய நோயாளிகள் அப்புறப்படுத்தப்பட்டனர். இதனால் அங்கு இப்போது 32 கைக்குழந்தைகள் உள்பட 291 நோயாளிகள் தவித்து வருகின்றனர். இதனை மருத்துவமனையை ஆய்வு செய்த உலக சுகாதார அமைப்பின் தலைமையிலான ஐ.நா. குழு உறுதி செய்துள்ளது. 291 நோயாளிகளில் 32 பேர் கைக்குழந்தைகள். மற்ற நோயாளிகள் பலரும் தீவிரக் காயங்கள், முதுகுத்தண்டுவட பிரச்சினைகள் என பாதிக்கப்பட்டு நகரக்கூட இயலாமல் இருப்பவர்களாவர்.

அங்கிருந்த நோயாளிகளும் ஐ.நா.வின் சுகாதாரப் பணியாளர்களும் கூறிய விஷயங்கள் தங்களை நிலைகுலைய வைத்ததாக ஐ.நா. குழு தெரிவித்துள்ளது. உயிருக்குப் பயந்தும், உடல்நலம் தேறுமா என்ற அச்சத்திலும் நோயாளிகள் இருக்கின்றனர். தங்களை எப்படியாவது காப்பாற்றுமாறு அவர்கள் கெஞ்சிக் கதறியுள்ளனர். அல் ஷிபா மருத்துவமனை 'மரணப் பகுதி' போல் இருக்கிறது. வரும் நாட்களில் நோயாளிகளை காசாவின் தெற்குப் பகுதிக்குக் கொண்டு செல்ல ஏதுவாக ஐ.நா. சுகாதாரப் பணியாளர்கள் இன்னும் நிறைய பேர் வருவார்கள் என ஐ.நா. குழு தெரிவித்துள்ளது. இப்போது அல் ஷிபா மருத்துவமனையில் இஸ்ரேலியப் படையினரும் தங்கியுள்ளனர்.

முன்னதாக, சனிக்கிழமை காலை அல் ஷிபாவில் இருந்து மக்கள் தாமாகவே வெளியேறியதாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்தாலும் வலுக்கட்டாயமாகவே தாங்கள் வெளியேற்றப்பட்டதாக காசாவாசிகள் சிலர் தெரிவித்தனர்.

மகமூது அபு ஆஃப், நாங்கள் துப்பாக்கிமுனையில் வெளியேற்றப்பட்டோம் என்று ஏபி செய்தி நிறுவனத்துக்கு தொலைபேசி வாயிலாக தெரிவித்துள்ளார். மருத்துமனையைச் சுற்றி டாங்கர்களும், உள்ளே ஸ்னைப்பர்களும் இருந்ததாக அவர் கூறியுள்ளார். மேலும் மூன்று பேரை இஸ்ரேல் ராணுவம் கைது செய்ததாகவும் கூறியுள்ளார்.

## இஸ்ரேல் - ஹமாஸ் போர் தீவிரம்

# பாலஸ்தீனத்துகான 2-வது தொகுதி உதவிப் பொருட்களை அனுப்பி வைத்தது இந்தியா



**புதுடெல்லி : நவ. 20,**

**இஸ்ரேலுக்கும் ஹமாஸ் குழுவினருக்கும் இடையேயான போர் தீவிரமடைந்துள்ள நிலையில், பாலஸ்தீனத்துக்கான இரண்டாவது தொகுதி உதவி பொருட்களை இந்தியா நேற்று அனுப்பி வைத்தது. இதனை வெளியுறவுத் துறை அமைச்சர் உறுதி செய்துள்ளார்.**

இதுகுறித்து இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "பாலஸ்தீன மக்களுக்கான மனிதாபிமான உதவிகளை நாம் தொடந்து வழங்கி வருகிறோம். இரண்டாவது ஏஜஎஃப்-எம்சிசி சி17 விமானம் 32 டன் உதவிப் பொருள்களை ஏற்றிக்கொண்டுஎகிப்தின் எல்-அரிஷ் விமானநிலையத்துக்கு புறப்பட்டுச் சென்றது" என்று தெரிவித்துள்ளார்.

எல்-அரிஷ் விமான நிலையம் எகிப்தின் எல்லைப்பகுதியில் காசாவுக்கு செல்லும் நுழைவுப் பாதையான ரஃபாவில் இருந்து 45 கிமீ தள்ளியிருக்கிறது. காசாவுக்கான மனிதாபிமான உதவிகளைக் கொண்டு செல்வதற்கான ஒரே பாதையாக காசா மட்டுமே உள்ளது. இஸ்ரேஸ் ஹமாஸ் போர் தொடங்கியதில் இருந்து இந்தப் பாதை முழுமையாக செயல்படவில்லை.

முன்னதாக, இந்தியா, மருந்துகள் மற்றும் பேரிடர் நிவாரணப் பொருள்கள் உள்ளிட்ட பாலஸ்தீன மக்களுக்கான மனிதாபிமான அடிப்படையிலான தனது முதல் தொகுதி உதவி பொருட்களை அக்.22ம் தேதி அனுப்பிவைத்தது.

இஸ்ரேல் மீது ஹமாஸ் தீவிரவாத குழுவினர் அக்.7ம் தேதி முன்னெப்போதும் இல்லாத அளவில் நடத்திய தாக்குதல் நடத்தியதில் 1200 பேர் கொல்லப்பட்டனர். 240 பேர் பிணையக் கைதிகளால் சிறைபிடிக்கப்பட்டனர். இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாகவும் ஹமாஸ் குழுவினரை முற்றிலும் அழிக்கும் நோக்கத்துடன் பதில் தாக்குதல் நடத்தி வருகிறது. இஸ்ரேல் - ஹமாஸ்களுக்கு இடையிலான இந்த மோதல் 7 வது வாரத்தை எட்டியுள்ளது. இஸ்ரேலின் பதில் தாக்குதலால் 5,000 குழந்தைகள் உட்பட 12,300 பேர் உ.யிரிழந்துள்ளதாக ஹமாஸ் குழுவினர் தெரிவித்துள்ளனர். இஸ்ரேல் தரப்பில் 1400க்கும் அதிகமானோர் இறந்துள்ளனர்.

வான்வழித் தாக்குதல் காரணமாக டஜன்கணக்கான பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்ட நிலையில், ஹமாஸ் போராளிகளுக்கு எதிரான தங்களின் தரைவழித் தாக்குதலை தெற்கு காசாவுக்கும் நீட்டிக்கப் போவதாக இஸ்ரேஸ் தெரிவித்துள்ளது.

## இந்தியா ராணுவ வீரர்களை திரும்பப் பெற வேண்டும்

# மாலத்தீவின் புதிய அதிபர்



**மாலே : நவ. 20,**

**இந்தியா தனது ராணுவ வீரர்களை திரும்பப் பெற வேண்டும் என மாலத்தீவின் புதிய அதிபர் முகமது மூயிஸ் முறைப்படி இந்தியாவிடம் கேட்டுக் கொண்டுள்ளார். இதற்கு மாலத்தீவு மக்களின் ஆதரவு இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.**

கடந்த 17-ம் தேதி (வெள்ளிக்கிழமை) மாலத்தீவின் எட்டாவது அதிபராக முகமது மூயிஸ் பதவியேற்றுக் கொண்டார். அவர் பதவியேற்ற 24 மணி நேரத்துக்குள் இந்திய ராணுவத்தை திரும்பப் பெற வேண்டும் என தெரிவித்துள்ளார். இந்த கோரிக்கையை மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜூ வசம் தெரிவித்ததாக சொல்லப்படுகிறது.

மாலத்தீவில் முகாமிட்டுள்ள இந்திய ராணுவ வீரர்களின் எண்ணிக்கை குறித்த விவரம் முறையாக தெரியவில்லை. தற்போது பதவி ஏற்றுக் கொண்டுள்ள புதிய அதிபர் முகமது மூயிஸ், அந்நாட்டின் முன்னாள் அதிபர் அப்துல்லா யாமீனுக்கு நெருக்கமானவர். இவர் 2013 முதல் 2018 வரையிலான ஆட்சி காலத்தில் சீனாவுடன் இணக்கமாக பயணித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், தனது தேர்தல் பிரச்சாரத்தில் வெளிநாட்டு படைகள் வெளியேற்றப்படும் என முகமது மூயிஸ் தெரிவித்திருந்தார்.

முன்னதாக, சீன அதிபர் ஜி ஜின்பிங்கின் சிறப்பு தூதர் ஷென் யிகினை அதிபர் முகமது மூயிஸ் சந்தித்திருந்தார். இந்த சந்திப்பின் போது தங்கள் நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கு பல ஆண்டுகளாக சீன அரசு வழங்கி வரும் பங்களிப்புக்கு அதிபர் முகமது மூயிஸ் நன்றி தெரிவித்திருந்தார். இந்த சந்திப்புக்கு பிறகு தான் இந்திய ராணுவம் தங்கள் நாட்டில் இருந்து திரும்பப் பெற வேண்டும் என தெரிவித்தார்.

# உலக பிரபஞ்ச அழகியாக நிகரகுவாவின் ஷெய்னிஸ் தேர்வு



**சான்சால்வடார் : நவ. 20,**

**72வது உலக பிரபஞ்ச அழகிப்போட்டி எல் சால்வடார் நாட்டில் நடந்தது. இதில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 90 பெண்கள் பங்கேற்றனர். இந்திய சார்பில் ஸ்வேதா ஷர்தா (வயது 23) பங்கேற்றார். இவர் இந்த ஆண்டுக்கான மிஸ் திவா யுனிவர்ஸ் பட்டத்தை வென்றவர். தனிப்பட்ட உரைகள், நேர்காணல்கள் மற்றும் ஆடை அலங்காரங்கள் என பல்வேறு பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்பட்டன.**

பிரபஞ்ச அழகிப்போட்டியின் இறுதிச்சுற்று இந்திய நேரப்படி நேற்று காலை எல் சால்வடோர் தலைநகர் சான் சால்வடாரில் உள்ள ஜோஸ் அடோல்போ பினெடா அரங்கில் நடந்தது. இதில் டாப் 20 பேரில் இந்திய அழகி இடம் பெற்றார். ஆனால் இறுதி 5 பேரில் இந்திய அழகி தேர்வாகவில்லை.

நிகரகுவா, தாய்லாந்து, ஆஸ்திரேலியா, கொலம்பியா, போர்ட்டோரிகோ ஆகிய 5 நாடுகள் சேர்ந்த அழகிகள் இடம்பெற்றனர். அவர்களுக்கு போட்டிகள் நடத்தப்பட்ட பிறகு பட்டத்துக்காக இறுதிச் சுற்றுக்கு நிகரகுவா, தாய்லாந்து, ஆஸ்திரேலியா அழகிகள் நுழைந்தனர். இறுதிச் சுற்றில் அவர்களிடம் கேள்விகள் கேட்கப்பட்டன.

அதன்பின் வெற்றியாளர் அறிவிக்கப்பட்டார். இதில் உலக பிரபஞ்ச அழகியாக நிகரகுவா நாட்டை சேர்ந்த ஷெய்னிஸ் பலாசியோஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரது பெயரை வெற்றியாளராக அறிவிக்கப்பட்டதும் மகிழ்ச்சியில் ஆனந்த கண்ணீர் வடித்தார். ஷெய்னிஸ் பலாசியோசுக்கு 2022-ம் ஆண்டு உலக பிரபஞ்ச அழகியாக அமெரிக்காவின் போனிகேப்ரீயல் கிரீடத்தை சூட்டினார். பிரபஞ்ச அழகி பட்டத்தை வென்ற முதல் நிகரகுவா பெண் என்ற சிறப்பை ஷெய்னிஸ் பெற்றார்.

இறுதிச் சுற்றில் ஷெய்னிஸிடம் நீங்கள் மற்றொரு பெண்ணாக ஒரு வருடம் வாழ முடிந்தால் யாரை தேர்வு செய்வீர்கள்? என்ன காரணம் என்று கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு அவர் 18-ம் நூற்றாண்டின் இங்கிலாந்து தத்துவாஞானியும் பெண்ணியவாதியுமான மேரி வோல்ஸ் போன்கிராப்டாக வாழ விரும்புவதாக தெரிவித்தார். அவர் எல்லைகளை உடைத்து பல பெண்களுக்கு வாய்ப்பளித்தார். இன்று பெண்களுக்கு எந்த வரம்புகளும் இல்லை என்று ஷெய்னிஸ் கூறினார்.

2-வது இடத்தை தாய்லாந்து அன்டோனியா போர்சில்ட்டும், 3-வது இடத்தை ஆஸ்திரேலியாவின் மொராயா வில்சனும் பிடித்தனர். பிரபஞ்ச அழகி பட்டத்தை வென்றுள்ள 23 வயதான ஷெய்னிஸ், தொலைக்காட்சி தொகுப்பாளர் மற்றும் மாடல் ஆவார். இப்போட்டியில் இந்திய அழகி ஸ்வேதா ஷர்தா ஏமாற்றம் அளித்தார்.

# விமானத் தாக்குதலைத் தீவிரப்படுத்திய இஸ்ரேல் 15 பாலஸ்தீனியர்கள் பலி



**காஸா : நவ. 20,**

**காஸா பகுதியில் இஸ்ரேல் விமானப்படை நடத்திய தாக்குதலில் 15 பாலஸ்தீனியர்கள் உயிரிழந்துள்ளதாக காஸா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.**

இஸ்ரேல் மீது கடந்த அக்டோபர் 7-ம் தேதி ஹமாஸ் அமைப்பினர் நடத்திய தாக்குதலில், 1,200 இஸ்ரேலியர்கள் உயிரிழந்தனர். சுமார் 250 பேரை ஹமாஸ் அமைப்பினர் பணயக்கைதிகளாக பிடித்துச் சென்றனர். இதைத்தொடர்ந்து ஹமாஸ் அமைப்பினரை குறிவைத்து, காஸா பகுதியில் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியுள்ளது.

இந்த தாக்குதல்களில் இதுவரை 12 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். ஆயிரக்கணக்கானோர் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். பணயக்கைதிகளைவிடுவிக்க ஹமாஸ் மறுத்துவருவதால், தாக்குதல்களைத் தீவிரப்படுத்தி வருவதாக இஸ்ரேல் கூறி வருகிறது. ஏற்கெனவே ஏவுகணை தாக்குதல்கள் நடத்தி வந்த இஸ்ரேல் தற்போது விமானப்படை மற்றும் ராணுவத்தை ஒருங்கிணைத்து தாக்குதல்களை நடத்தி வருகிறது.

இந்நிலையில் இஸ்ரேல் விமானப்படையினர் நுசிராத் மற்றும் தெற்கு கான்யூனிஸ் நகரில் நடத்திய தாக்குதலில் 15 பேர் கொல்லப்பட்டதாக பாலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்துபாலஸ்தீனசெய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள செய்தியில், இஸ்ரேல் விமானப்படை நடத்திய தாக்குதலில் 4 மாடி கட்டிடம் சேதமடைந்துள்ளதாகவும், 12 பேர் அங்குஉயிரிழந்ததாகவும் தெரிவித்துள்ளது. இதே போல் மேற்கு கரைப் பகுதியிலும் இஸ்ரேல் ராணுவம் தாக்குதல்கள் நடத்தி வருவதாக பாலஸ்தீன அதிகாரிகள் குற்றம்சாட்டியுள்ளனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை அல்-ஷிபா மருத்துவமனையில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட நோயாளிகள் வெளியேறியதாகவும், இஸ்ரேல் ராணுவத்தின் அறிவிப்பை அடுத்தே அனைவரும்வெளியேறியதாக தெரிவிக்கப்பட்டது. ஆனால், இந்த தகவலை மறுத்துள்ள இஸ்ரேல் ராணுவம், மக்கள் பாதுகாப்பாக வெளியேறுவதற்கான வாய்ப்புகள் வழங்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளது.

## ஸ்பேஸ்எக்ஸ் ஸ்டார்ஷிப் ராக்கெட் திட்டத்தில் சிக்கல்

# பூஸ்டர் வெடித்து சிதறியது



**டெக்சாசில் : நவ. 20,**

**உலக பணக்காரரான எலான் மஸ்க்கின் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம், செவ்வாய் கிரகம் மற்றும் நிலவில் மனிதர்கள் வசிப்பதற்கான சாத்திய கூறுகளை ஆராய்வதற்காக ஸ்டார்ஷிப் விண்கலத்தை உருவாக்கிது. அந்த நிறுவனம் இதுவரை உருாக்கியதிலேயே மிகப் பெரிய ராக்கெட் இதுவாகும்.**

கடந்த ஏப்ரல் மாதம் ஸ்டார்ஷிப் விண்கலம் சோதனை முயற்சியாக விண்ணில் ஏவப்பட்டது. ஆனால் அது தோல்வியில் முடிந்தது. ஏவப்பட்ட நான்கு நிமிடங்களில் ஸ்டார்ஷிப் வெடித்து சிதறியது. இந்நிலையில் ஸ்டார் ஷிப்பின் சோதனை 2-வது முறையாக நேற்று முன்தினம் சனிக்கிழமை நடந்தது. டெக்சாசில் உள்ள ஏவுதளத்தில் இருந்து ஸ்டார்ஷிப் ராக்கெட் விண்ணில் ஏவப்பட்டது.

சுமார் 400 அடி உயரம் கொண்ட விண்கலத்தில் சூப்பர் ஹெவி எனப்படும் முதல் பகுதியில் பூஸ்டர் இருந்தது. மற்றொரு பகுதியில் 165 அடி உயர ஸ்டார் ஷிப் விண்கலம் பொருத்தப்பட்டது. ஏவப்பட்ட சிறிது நேரத்தில் பூஸ்டர் வெற்றிகரமாக ஸ்டார் ஷிப்பில் இருந்து பிரிக்கப்பட்டது. பூஸ்டரை தரையிறக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் ஸ்டார்ஷிப்பில் இருந்து பிரிந்த பூஸ்டர் வெடித்து சிதறியது.

இது தொடர்பாக ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனம் கூறும்போது, விண்கலம் ஏவப்பட்ட 10 நிமிடங்களுக்கு பிறகு தொடர்பு துண்டிக்கப்பட்டது. 2-வது கட்டத்தில் நாங்கள் தரவை இழந்தோம். எங்கள் ஸ்டார்ஷிப் விண்கலம் இன்னும் சென்று கொண்டிருக்கிறது. இது போன்ற ஒரு சோதனை மூலம் நாம் கற்றுக் கொள்வதில் இருந்து வெற்றி வருகிறது. சோதனை ஸ்டார்ஷிப்பின் நம்பகத் தன்மையை மேம்படுத்த உதவும். இந்த ராக்கெட் ஏவுதல் ஸ்பேஸ் எக்ஸ் என்ஜினீயர்களால் நம்ப முடியாத அளவுக்கு வெற்றிகரமாக இருந்தது என்று தெரிவித்தது.

# "போர் நிறுத்தமா? கூடவே கூடாது" பைடன் திட்டவட்டம்



**அமெரிக்கா : நவ. 20,**

**கடந்த அக்டோபர் 7 அன்று பாலஸ்தீனத்தை மையமாக கொண்ட ஹமாஸ் அமைப்பினர், இஸ்ரேல் மீது திடீர் தாக்குதல் நடத்தி 1200க்கும் மேற்பட்டவர்களை கொன்று, 200க்கும் மேற்பட்டவர்களை பணயக்கைதிகளாக கடத்திச் சென்றனர்.**

இதைதொடர்ந்துஇஸ்ரேல், ஹமாஸ் அமைப்பினரை முற்றிலும் ஒழிக்க போவதாக உறுதி எடுத்து அவர்கள் ஒளிந்திருக்கும் பாலஸ்தீன காசா பகுதி மீது தரைவழி மற்றும் வான்வழியாக தொடர் தாக்குதல்களை நடத்தி வருகிறது. ஈரான், ஈராக், சவுதி அரேபியா, ஏமன், லெபனான், கத்தார் உள்ளிட்ட சில அரபு நாடுகள் ஹமாஸ் ஆதரவு நிலையை எடுத்துள்ளன. அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, பிரான்ஸ், ஜெர்மனி உள்ளிட்ட மேற்கத்தியநாடுகள் இஸ்ரேல் ஆதரவு நிலையை எடுத்துள்ளன.

போர் 40 நாட்களை தொடர்ந்து நாளுக்கு நாள் தீவிரமாகநடைபெற்றுவருகிறது. பாலஸ்தீன காசா பகுதியில் 11 ஆயிரத்திற்கும் மேல் உயிரிழப்புகள்நடந்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. லட்சக்கணக்கானவர்கள் தங்கள் வீடுகளை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர். இதன் காரணமாக போரை தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யுமாறு இஸ்ரேலுக்கு பல உலக நாடுகளும், ஐ.நா. மற்றும் உலக சுகாதார அமைப்புகளும் கோரிக்கை வைத்துவருகின்றன. ஆனால், இஸ்ரேல் அக்கோரிக்கைகளை புறக்கணித்து வருகிறது. இந்நிலையில், அமெரிக்காவின் பிரபல "திவாஷிங்டன்போஸ்ட்" பத்திரிகையில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் இஸ்ரேல்-ஹமாஸ் இடைநிறுத்தம் குறித்து கருத்து பதிவிட்டிருக்கிறார்.

அதில் அவர் தெரிவித்திருப்பதாவது: போர் நிறுத்தம் வேண்டும் என பலர் கூறி வருகின்றனர். ஹமாஸ் அமைப்பினர் பயங்கரவாத சித்தாந்தத்தை கடைபிடித்து வருவதை நிறுத்தாத வரையில் போர் இடைநிறுத்தம் என்பது அமைதிக்கான வழியாக இருக்காது. ஹமாஸ் அமைப்பினருக்கு ஒவ்வொரு போர் இடைநிறுத்த காலமும் தங்கள் ராணுவ தளவாடங்களையும், பயங்கரவாத திட்டங்களுக்கான ஆயுதங்களையும் சேகரித்து வைத்து கொள்ளும் காலமாக உள்ளது. தங்கள் அமைப்பின் பயங்கரவாதிகளை பலம் பெற செய்துமீண்டும் அப்பாவிகளை கொல்ல தொடங்குவார்கள். தற்காலிகமாக போரை நிறுத்துவது நமது நோக்கமாக இருக்க கூடாது; நிரந்தரமாக பயங்கரவாதத்தை முடிவுக்கு கொண்டுவருவதே நோக்கமாக இருக்க வேண்டும்; தொடர்ந்து நடைபெறும் வன்முறைக்கு ஒரு முடிவுவர வேண்டும். அத்துடன் வரலாற்று தவறுகள் மீண்டும் நடைபெறாதவாறு பார்த்து கொள்ள வேண்டும்.

இஸ்ரேலும் மனிதாபிமான சட்டங்களை மதித்து, பொதுமக்களின் உயிரிழப்பை குறைத்து கொள்ள முயற்சி செய்ய வேண்டும். தங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலால் மனதில் ஏற்பட்டுள்ள காயத்தையும் பதிலடி கொடுக்க வேண்டிய கோபத்தையும் நிதானமாக வெளிப்படுத்தி தவறுகள் நடக்காமல் இஸ்ரேல் பார்த்து கொள்ள வேண்டும். போர் நிறைவடைந்ததும், பாலஸ்தீனம் இரு நாடுகளாக பிரிக்கப்படுவதுதான் இந்த சிக்கலுக்கு தீர்வு என்று பைடன் தெரிவித்துள்ளார்.

# மின்சார கார்கள் உற்பத்தியில் திடீர் வேகத்தடை ஏன்?



**அமெரிக்கா : நவ. 20,**

**சுற்றுச்சூழல் மாசுபடுதலை முழுவதுமாக குறைக்க, படிம எரிபொருளுக்கு பதிலாக மின்சக்தியை பயன்படுத்தும் வாகனங்களை தயாரிப்பதில் உலகெங்கும் உள்ள வாகன உற்பத்தியாளர்கள் தீவிரமாக முனைந்து வருகின்றனர். பல ஆண்டுகளாக அமெரிக்காவில் மின்சார கார்கள் உற்பத்தி அதிகரித்து வந்தது.**

ஆனால், கடந்த சில வாரங்களாக அமெரிக்காவில் மின்சார வாகன உற்பத்தியாளர்கள், தங்கள் உற்பத்திக்கான இலக்கை குறைத்துள்ளது மட்டுமின்றி தொழிற்சாலைகளில் உற்பத்தியை அதிகரிப்பதற்கான பெரும் முதலீட்டு திட்டங்களையும் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளனர்.

கோவிட்-19 பெருந்தொற்று காலகட்டத்திற்கு பிறகு உலக பொருளாதாரம் மெல்ல சரிவிலிருந்துமீண்டுவருகிறது. படிம எரிபொருள் வாகன விற்பனை சீரடைந்துள்ள நிலையில், மின்சார வாகன விற்பனை மட்டும் எதிர்பார்த்த அளவு அதிகரிக்கவில்லை.

புதுப்புது வாகனங்கள் சந்தையில் வந்தாலும், ஒரு முறை "சார்ஜ்" செய்தால் மின்சார கார்கள் பயணிக்கும் தூரமான "ரேஞ்ச்", எதிர்பார்த்த அளவில் அதிகரிக்கவில்லை. அமெரிக்கா முழுவதும் வாகனங்களை சார்ஜ் செய்வதற்கான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதில் உற்பத்தியாளர்களால் நிர்ணயித்த இலக்கை எட்ட முடியவில்லை. இது மின்சார வாகனங்களை வாங்க விரும்பும் வாடிக்கையாளர்களை ஊக்குவிக்கும் விதமாக இல்லை என பொருளாதார நிபுணர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

பரப்பளவில் பெரிய நாடான அமெரிக்காவில் பொது போக்குவரத்து வசதிகள் மிகவும் குறைவு. அமெரிக்கர்கள், தங்கள் அன்றாட அலுவல்களுக்கும், விடுமுறை நாள் பயணங்களுக்கும், நீண்டதூர பயணத்திற்கும் கார்களையே அதிகம் நம்பி உள்ளனர். ஆனால், பெட்ரோல் நிரப்பும் நிலையங்களை போல் மின்சக்தியை ரீசார்ஜ் செய்யும் வசதிக்கான கட்டமைப்பு அமெரிக்காவில் அதிகம் இல்லாததை அனுபவபூர்வமாக உணர்ந்துகொண்டுள்ளதால் மின்சார கார்களுக்கு மாற தயங்குகின்றனர்.


இதனால், தங்களிடம் ஏற்கெனவே அதிகமாக குவிந்திருக்கும் உற்பத்தி செய்யப்பட்ட வாகனங்களை முதலில் விற்று விடுவதில் உற்பத்தியாளர்கள் கவனம் செலுத்தி வருவதாக நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். மேலும், வாகனங்களுக்கான விலையை குறைக்க டெஸ்லா, ஃபோர்டு, ஜெனரல் மோட்டார்ஸ் உள்ளிட்ட பல மின்சார கார் உற்பத்தியாளர்கள் திட்டமிட்டு வருகின்றனர்.

இந்தியாவில், மின்சார வாகனங்களில் கார்களை விட இரு சக்கர வாகனங்களே அதிகளவில் விற்பனையாவதாலும், இங்கும் சார்ஜிங் கட்டமைப்பு வசதிகள் எதிர்பார்த்த அளவு அதிகரிக்காததால், அமெரிக்காவில் தோன்றியுள்ள சிக்கல் இங்கும் வர கூடும் என வாகனத்துறை வல்லுனர்கள் தெரிவிக்கின்றனர்.



# உதயநிதியை முதல்வராக்கும் திட்டம் ஒருபோதும் நிறைவேறாது

# தமிழக ஆளுநர் ரவி திடீர் டெல்லி பயணம் தமிழக அரசியலில் பரபரப்பு





# கனிமங்கள் கொண்டு செல்ல தனி நீதிபதி உத்தரவுக்கு உயர் நீதிமன்றம் தடை


| சென்னை / புதுக்கோட்டை | 20.11.2023 | varalaruu.com | பக்கம்:5 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

மினூ மசானி , இந்திய அரசியல்வாதி (பி.1905) (இ.1998)



எம். கே. ராதா , தென்னிந்திய நாடக, திரைப்பட நடிகர் (பி.1910) (இ.1985)



மில்கா சிங் , இந்தியத் தடகள விளையாட்டு வீரர் (பி.1929) (இ.2021)



ஜோ பைடன் , அமெரிக்க அரசியல்வாதி (பி.1942)



தேவா , தென்னிந்தியத் திரைப்பட இசையமைப்பாளர், பாடகர் (பி.1950)



## இன்றைய நினைவு நாள்

என்றி டிரேப்பர் , அமெரிக்க மருத்துவர், வானியலாளர் (பி.1837) (இ.1882)



ஜி. ராமநாதன் , தமிழ்த் திரைப்பட இசையமைப்பாளர் (இ.1963)

